# நங்கை

மாதர் மாத இதழ்



**எழுச்சி பெறவேண்டும் - மாதர்**
**உயர்ச்சி பெறவேண்டும்**
**பள்ளி வாழ்வினிலேயே - அதற்குப்**
**பயிற்சி பெறவேண்டும்.**

பெப்ரவரி — 1990 10/=

**'NANGAI' WOMEN'S MAGAZINE**

# நங்கை - 4

பெப்ரவரி 1990

## வளரும் நங்கையரே

எழுச்சி பெற வேண்டும் — மாதர்
உயர்ச்சி பெற வேண்டும்
பள்ளி வாழ்வினிலே — அதற்குப்
பயிற்சி பெற வேண்டும்.

புரட்சி என்றதுமே — கைகள்
பொங்கி எழவேண்டும்
மருட்சி என்பதுவோ — நல்
மனதில் அகல வேண்டும்

வளரும் நங்கையரே — நல்ல
வாழ்வை உணரவேண்டும்
சுழலும் உலகினிலே — பெரும்
சூரராகிட வேண்டும்.

— அக்னிராஜ்

**அட்டைப் படம்**

கல்லூரி மாணவிகள்

அகல்யா - செ.
யாழினி - சி.
சர்மிலா - பா.
கவிதா - சி.
நர்மதா - ச

**Nangai** — Women's Monthly Magazine.

*Editor:* Mrs. Saroja Sivachandran, B. A, Hons (Cey.), M. A. (Jaf.)

*Published by.* Centre for Women and development,
07, Ratnam Lane, off. K. K. S. Road, Vannarpannai,
Jaffna, Sri Lanka.

தனிப் பிரதி: ரூபா 10-00 — ஆண்டு சந்தா: 130-00
வெளிநாடு, தனிப்பிரதி ரூபா 50-00 — ஆண்டு சந்தா: 550-00

# எமக்குப் 'பொருத்தமான பெண்நிலைவாத' சித்தாந்தம்

வளர்முகநாடுகளின் அபிவிருத்தி தொடர்பான சித்தாந்தங்கள் அறுபது, எழுபது. எண்பதுகளில் வெவ்வேறுபட்டனவாக மாற்றமடைந்து வந்துள்ளன. யுத்த அழிவுக்குப்பின் ஜேர்மனியை விருத்தியின் உச்சிக்கு உயர்த்திய மார்ஷல் திட்டம், முதலை பாரியளவில் பாய்ச்சுவதன் மூலமும் இயந்திரமயப்பட்ட தொழில் நுட்பத்தாலும், நாட்டை கைத்தொழில் மயமாக்கி அபிவிருத்தி சாத்தியம் என நிரூபித்தது.

இச் சித்தாந்தத்தின் அடிப்படைகளான முதலாக்கம், மேற்குலக தொழில் நுட்பமாதிரி என்பவற்றை அப்படியே பின்பற்றிய வளர்முக நாடுகள் அபிவிருத்தியில் படுதோல்வியைக் கண்டன. தோல்வி மாத்திரமன்றி 'உள்ளதும் கெட்டநிலை'யில் பட்டினியையே நாட்டிற் பரப்பின. அனுபவத்தால் தவறெனக் கண்டு கடும் விமர்சனத்துக்குட்பட்ட இவ்வபிவிருத்தி சித்தாந்தங்கள் எழுபது, எண்பதுகளில் தலைகீழாக மாற்றத்தைப் பெற்றன. இவற்றின் விளைவாகவே இடைநிலைத் தொழில் நுட்பங்கள், பொருத்தமான தொழில் நுட்பங்கள் என்ற சிந்தனைகள் பிறந்தன.

சீனாவில் மாக்சிசத்தைப் புகுத்திய மாவோகூட சோவியத் ஒன்றியத்தின் மாக்சிச வழிமுறையைப் பெருமளவு மாற்றியே, அதாவது கீழைத்தேச சீனாவுக்குப் பொருத்தமாக்கியே அதனைப் புகுத்தி வெற்றி கண்டார்.

மேற்குலக நாடுகளில் பின்னணி வேறு. எமது பின்னணி வேறு. மேற்குலக பின்னணியில் எழும் எந்தச் சித்தாந்தங்களாயினும் அவை. அங்கு நடைமுயில் பாரிய வெற்றியைக் கண்டாலும்கூட அவற்றை நாம் அப்படியே பின்பற்றுவது வெற்றியளிக்காது என்பதும் முறைகேட்டையே தோற்றுவிக்கும் என்பதும் நவீன வரலாறு. இது பெண்நிலைவாத சித்தாந்தத்திற்குப் பொருத்தமானதே.

பெண்நிலை வாதம் பற்றி மேற்குலகில் வளரும் எண்ணக்கருத்துக்கள் – சித்தாந்தங்களை நாம் நன்கு உள்வாங்கி எமது மண்ணுக்கு உரியதாக அவற்றை உருவாக்கி, அதனை எமக்குப் பொருத்தமானதாக அமைத்து பின்பற்ற முனைவதே அறிவுடமையாகும். அதுவே வெற்றியையும் அளிக்கும்.

இவ்விதழில் வெளிவரும் இருகட்டுரைகள் எமக்குரிய பெண்நிலைவாதம் பற்றிய சில சிந்தனைகளைத் தொடுகின்றன. கருத்துக்கள் விமர்சனத்திற்குரியவை – சர்ச்சைக்கு இடமளிப்பவை. நாம் எமக்குரிய அதாவது எமது கலாசார விழுமியங்களுக்கு இயைபான பெண்நிலைவாதம் பற்றி வாதப் பிரதிவாதங்கள் செய்வோம்– கருத்துப் பரிமாற்றம் நடத்துவோம். இவற்றின் விளைவாக எமக்குப் பொருத்தமான பெண்நிலைவாத சித்தாந்தம்' உதயமாகும். அவ் ஒளிவழி சென்று வெற்றி பெறுவோம்.

# காதோரம்...

## மகளிர் அபிவிருத்தி நிலையக் கருத்தரங்கில் கேட்டவை

* மேலை நாடுகளில் பெண்கள் சகல வேலைகளிலும் பங்கேற்று வருகின்றனர். இயந்திரத் துறையில், மின்சாரத் துறையில் பெண்கள் பங்கேற்க முடியாதா? ஏன் ஒரு தொலைக் காட்சிப் பெட்டியை, வானொலியை, மின்சாரத்தைக் கழட்ட பூட்ட பெண்கள் பழகக்கூடாதா? ஆண்களைப் போல பெண்களும் சகல தொழில்நுட்பத் துறைகளிலும் பங்கேற்று தமதுவேலை வாய்ப்பு எல்லைகளை விரிவுபடுத்திக் கொள்ளவேண்டும்.

திரு. ச. சுப்பிரமணியம்
கல்வியதிகாரி
(மூளாயில் ...)

* இலங்கையில் பெண்கள் அரசியல் ஜனநாயக உரிமைகளை ஆரம்ப காலத்திலிருந்தே அனுபவித்துவருகின்ற போதிலும் அபிவிருத்தி என்ற நோக்கில் ஆரம்ப கட்டத்திலேயே நிற்கின்றுர்கள். பெண்களின் அபிவிருத்தி, பெண் விடுதலை தொடர்பான சிந்தனைகள் கருத்துப் பரிமாறல்களுக்கு உட்பட்டு பல்கோணக் கருத்துக்களை உள்வாங்கி பரிணும வளர்ச்சிபெற்று தனக்கென ஓர் ஆழமான பாதையை அமைத்து வளர்ச்சி பெற வேண்டும். கருத்தரங்குகள் இவற்றிற்கு பெரிதும் உதவும்

திருமதி. சரோஜா சிவசந்திரன்
இயக்குனர், மகளிர் அபிவிருத்தி நிலையம்
(நெல்லியடியில் )

* யாழ். மாவட்டத்தில் நகர்சார் பகுதிகளில் பெண்கள் அதிகமாகத் தொழில் பார்க்கின்றனர். இவர்களுக்கு மிகக் குறைந்தளவு ஊதியமே வழங்கப்படுகின்றன. தொழில் நிலைமைகளும் திருப்திகரமானதல்ல இச் சுரண்டலைத் தீர்ப்பதற்கு மகளிர் அமைப்புக்கள் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கலாநிதி.
சு. நித்தியானந்தன்
(உரும்பிராயில் ...)

* அபிவிருத்தி என்பது சகல அம்சங்களையும் உள்ளடக்கியதோர் மொத்த அபிவிருத்தியாக அமைய வேண்டும். பெண்கள் தமது கிராமத்தின் மூலவளத்தை மாத்திரம் நம்பியிராது எங்கெங்கு சிறு தொழில்களைச செய்யக்கூடிய மூலவளங்கள் கிடைக்கின்றதோ அவற்றைப் பயன்படுத்திச் சிறு தொழில்களை ஆரம்பிக்க வேண்டும். உற்பத்தி சந்தைப்படுத்தல் போன்ற சகல வற்றையும் தாங்களே செய்தல் வேண்டும். இடைத் தரகர்களினுல் ஏமாற்றப்படும் நிலையினை ஏற்படுத்திக் கொள்ளக் கூடாது.

செல்வி சி. அம்பிகாதேவி
விரிவுரையாளர்
(வேலணையில் )

* வளர்முக நாடுகளில் உள்ள பெண்கள் தமது வாழக்கூடிய வயதெல்லையான 55 வருட காலத்தில் 15 வருடத்தினைச் சமையல் செய்வதிலேயே செலவிடுகின்றனர். இவை தவிர அவர்கள் ஈடுபடும் ஏனைய துறைகளான தையல், சங்கீதம், பரதநாட்டியம் போன்றனவும் ஆண்களின் மனமகிழ்ச்சிக்காக ஈடுபடும் துறைகளாகவே உள்ளன....

திருமதி. சித்திரலேகா மௌனகுரு
சிரேஷ்ட விரிவுரையாளர்
(நீர்வேலியில்...)

# இறைவனுக்கு ஓர் விண்ணப்பம்

இறைவா !
கரிந்து போன —
காகிதத் துண்டில்
உனக்கு —
ஓர் விண்ணப்பம்

மாந்தரின் தலைவா !!
துண்டாடப்பட்ட
கரமொன்றால்
உனக்கு ஓர்
இறைஞ்சுதல்

அண்ட சராசரங்களை
அடக்கியாளும்
ஆண்டவா !!!
அடிமைப்பட்ட
மக்களின் பேரில்
உனக்கு ஓர்
வேண்டுதல்

உலகில்
அரக்கத்தனம்
அரங்கேறும் போது
அங்கு
''அவதரிப்பேன்'' — என்று
அருளினாயே ?

எங்கெல்லாம்
மானிடப் பிசாசுகள்
மார் தட்டி
திரிகின்றனவோ
அங்கெல்லாம்
மாறுவேடத்தில்
மாயங்கள் புரிந்து
மாந்தரைக் காத்தாய்

இது மட்டுமா !
நீதியின் வாசலை
அநீதியின்
நிழல் கூட
அணுகப் பார்த்தாலும்
அமானுஷ்ய
முறைகளால்
தடுத்தாய்
தர்மத்தைக் காத்தாய்

ஆனால் —
தினந்தோறும்
நிமிடந்தோறும்
வினாடிகள் தோறும் — இங்கு
மகத்தான
மானிட உடல்கள்
கடித்துக் குதறப்படுகின்றன
எமனுலகம் அனுப்பப்படுகின்
றன

பழந்தமிழ் இலக்கிய
'பெருமை மிகு'
பெண்மைகள்
அழிக்கப்படுகின்றன
அவலப்படுகின்றன

இவை மட்டுமா
பாடசாலைகள்
நூல் நிலையங்கள்
வைத்தியசாலைகள்
பரமன் நீ
குடிகொள்ளும்
பரிசுத்த ஆலயங்கள்
எவையும்
எவையுமே தப்பவில்லை

அகில முதல்வா
எங்கு
திரும்பினும்
இடிந்த சுவர்கள்
பிய்ந்த கூரைகள்
முறிந்த மரங்கள்
துண்டித்த கரங்கள்
நொறுங்கிய மனங்கள்

இதையெல்லாம்
பார்த்தும்
மௌனம் ஏனோ ?
கூறு ஆண்டவா

சந்திரிக்கா கி

---


திருமண சேவை
மற்றும்

காணி வாங்க - விற்க
வீடு கட்டுவதற்கு
திருத்துவதற்கு

தொடர்பு கொள்ளுங்கள்:
எஸ். சண்முகநாதன்
திருமண சேவை நிலையம்
35. செட்டித் தெரு,
நல்லூர்.

# பெண்கள் மேலான சில சட்டரீதியான தடைகள் பிலிப்பைன்ஸ் நாட்டில் நீக்கப்பட்டுள்ளன

பிலிப்பைன்ஸ் நாட்டில், பெண்கள் ஆண்களோடு சமமாக செயற்பட தடையாக இருந்த சட்ட ரீதியான தடைகள் நீக்கப்பட வேண்டும்என்பது தொடர்பாக பிலிப்பைன்ஸ் காங்கிரசின் கீழ்ச்சபை ஓர் சட்ட மூலத்தினை நிறைவேற்றியுள்ளது.

1989, பெப்பிரவரியில் கொண்டு வரப்பட்ட இச் சட்டம், பெண்கள் திருமண அந்தஸ்தை கவனியாது ஆண்கள் போல ஒப்பந்தங்களில் கைச்சாத்திடக்கூடிய சட்டரீதியான வயதினை பெண்களுக்கு உறுதியளிக்கிறது. இதன் படி ஓர் திருமணமான பெண் கணவனின் சம்மதமின்றி கடன் பெறுவதற்கோ அன்றி ஓர் வியாபாரத்தில், ஈடுபடவோ முடியும்.

மேலும் கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிக்கும் போதோ அன்றி விசா பெறும் பே தோ அல்லது ஏனைய பயண சான்றுகளில் கணவனின் சம்மதம் பெறவேண்டிய தேவையில்லை.

அத்துடன், அரசாங்கத்திலும் சகல திட்டங்களிலும் சமமாகப் பங்கு கொள்ள பெண் உரித்துடையவளாகிருள். தனியார் துறையிலும் விவசாயக் கடன், வேறு கடன்களைப் பெறுவதற்கும் அவள் உரித்துடையவளாகின்ருள்.


# இலங்கையில் முதன் முதல் வெளிவந்த பெண்களுக்கான பத்திரிகை

— குறமகள்

வண்ணூர்பண்ணை பி. ஏ. தம்பி ஒழுங்கையைச் சேர்ந்த மூநாட்டி திருமதி மங்களம்மாள் மாசிலாமணி அவர்களைப் பற்றிய கட்டுரைகள் அவரது நூற்ருண்டு நினைவு நோக்கி பல பத்திரிகையிலும் வெளிவந்தன. அவர் தமிழ் மகள் எனும் பெயரில் 'யாமார்க்கும் குடியல்லோம்' என்ற இலட்சிய வாசகத்தோடு இப்பத்திரிகையை வெளியிட்டார். 1923ஆம் ஆண்டு தொடக்கம் வெளிவந்த இப்பத்திரிகையே சகல இனத்தையும் சேர்ந்த இலங்கைப் பெண்களின் மத்தியில் முதலாவது பெண்களுக்கான பத்திரிகை எனப் புகழ் பெற்றது. அவரது கணவரான மாசிலாமணி அவர்கள் 'தேசாபிமானி" எனும் பத்திரிகையின் ஆசிரியராக விளங்கிஞர். இவர்களது புத்திரியின் கணவரே சகலராலும் அறியப்பட்ட கலைப் புலவர் நவரத்தினம் அவர்கள்.

இவர் 1933ஆம் ஆண்டில் 'ஞாயிறு' எனும் பத்திரிகையைத் தொடங்கிஞர். இவரது 1933ஆம் ஆண்டுஇளவேனிற் கதிரிலே வெருரு பெண்கள் பத்திரிகை பற்றிய செய்தி ஒன்று காணப்படுகிறது.

திருகோணமலை ஐக்கிய சங்கத்தினரால் ஆண்டிற்கொரு முறை வெளியிடப்பட்டு வரும் "மாதர் மாலிகை" எனும் பத்திரிகையில் வந்த சில கட்டுரைகளின் தரம் பற்றிக் கூறி, இப்பத்திரிகை முயற்சியில் ஈடுபட்ட திருமகள் தையல்நாயகி சுப்பிரமணியம் என்பவருக்குப் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டிருந்தது. 'மாதர் மாலிகை' தொடங்கிய திகதி பற்றிய தகவல் பெறமுடியாதிருக்கின்றது. எனினும் இது தமிழ்ப்பேசும் இலங்கை மக்களின் இரண்டாவது பத்திரிகை எனக் கொள்ளலாமென நினைக்கின்ருேம். பத்திரிகைகள் சஞ்சிகைகள் பற்றிய ஆய்வாளர்கள் தயவு செய்து இவ்விரு பத்திரிகைகள் பற்றியும் கவனத்துக்கெடுத்துக் கொள்ளுதல் நலமென நினைக்கின்ருேம்.



## உயர்வோங்க....

கொற்றவர் சபையிலும் மற்றவரும் போற்ற
கொலுவான விளக்காகத் துலங்கி
நற்செயல் நாட்டிற்கு இயற்றியென்றும்
நலமோங்கச் செய்திட வேண்டும் – பெண்கள்
உயர்வோங்கச் செய்திட வேண்டும்.

கவிதாஸ் யாழ்ப்பாணம்.

## நங்கை சளைக்கவில்லை

இதழ் மூன்றும் பார்த்தேன். ஒன்றுக்கொன்று சளைக்க வில்லை. கட்டுரைகள், கவிதைகள் தரம் உயர்வாகவே இருக்கின்றன. பெண்கள் இதழ் அதனால் பெண்களின் படைப்புக்கள் அதிகம் போலும். நிச்சயம் நங்கை நல்ல தரத்தைப் பிடிக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

எஸ். கவிதா, அத்தியடி.

## பெண்களுக்கு உற்சாகம் தரும் இதழ்

''நங்கை'' இதழ் பெண்கள் இதழாக மட்டுமல்ல பெண்களுக்கு உற்சாகம் தரும் இதழாகவும் இருக்கிறது. பெண்கள் என்றால் அழகுப் பதுமைகள், அடுப்பங்கரை என்றிராமல் அவர்களும் ஒரு சிந்திக்கும் மனித ஜீவன்கள் என்பதை நங்கை வெளிப்படுத்தி வருகின்றாள். நங்கை உயர்ந்து வாழட்டும்.

பொ. சந்தியா, வவுனியா.

## புதுமை தெரிகிறது

மேம்போக்கான கட்டுரைகளைத் தவிர்த்து ஆக்கபூர்வமான, இதுவரை ஏனைய சஞ்சிகைகள் தொடாத விஷயங்களை நங்கை தொட்டுச் செல்கிறது. நல்ல முயற்சி. நல்ல முன்னேற்றம். தொடரட்டும் பணி, வளரட்டும் நங்கை.

க. குமாரவேல், புங்குடுதீவு.

## நங்கை தன் இடத்தைத் தேடுகிறாள்

இதழ்கள் மூன்றும் வாசித்தேன். கனமான பகுதிகள்தான் அதிகம் உண்டு. அது நிறைவாகவும் இருக்கிறது. நங்கை போகும்வழி சரியான வழியே, நங்கை தனக்கென தனியான தன் இடத்தைத் தேடுவது தெரிகிறது. என் நல் வாழ்த்துகள்

இ.மஞ்சுளா, சுண்டுக்குளி.

# Science in the service of mass murder of female Babies in India

Amniocentesis is a scientific technique that was intended to be used in detecting genetic abnormalities of a foetus. In India, It is currently being used as a means for sex determination. By comparison to other countries amniocentesis is quite expensive in India. Yet not only upper class women, but even working class women have access to the test. A recent survey revealed that when women found out their foetus was female, many chose to abort. Many argue that it was better to spend a bit of money now for an abortion than have to pay a fortune for a girl's future marriage.

The controversy began a few years ago when the results of several reports were published in popular Indian magazines and journals. Many of the results were horrifying Of 8,000 abortions following amniocentesis 7,999 were found to involve female foetuses. In addition between 1978 to 1983, it is estimated that 78,000 female foetuses were aborted after sex determination Test in India.

Women have always been the ones burdened with the effects of family planning practices. Harmful effects of pregnancy tests, contraceptive pills, Anti-pregnancy injections and unhygienic camps for mass sterilisation of women are just a few of the drawbacks often overlooked by the family planning policy makers.

India has a history of killing female children by putting opium on the mother's nipple, by putting the afterbirth over the child's ace, and by ill treating its daughters. Even today, female members of the family get inferior trestment as far as food, medication, and education is concerned. When a girl grows up she is further harassed about her dowry. Many social scientists ask whether or not it is better to die rather than be ill treated. Does the birth of millions of unwanted girls improve the status of women? To think that it is better to kill a female child whose sex is not highly valued in the society. Next people will rationalize that it is better to kill the poor rather than let them suffer poverty and deprivation! how horrifying.!

But what can be the long term implications if such trends continue? India is one of the few countries where the female - to - male ratio is declining. Economists often say that if the supply of women is reduced, women's status will be enhanced.

According to this logic, women won't be burnt alive because of insufficient dowry because they won't be an easily replaceable commodity. But the Economists forget the socio-cultural milieu in which women have to live. A society that treats women as mere sex object will not treat women in a more humane way just because they are in scarce supply. On the contrary, in many local communities, there is a negative correlation between the female/male sex ratio and the incidence of rape, abduction and forced polyandry.

Another argument in favour of sex determination test is one which touts the myth of the ideal balanced family. It is argued that women

who have one or more daughters should be allowed to abort their daughters and try again to produce a son. This concept of balanced family is extremely sexist and very frightening. Could a couple undergo amniocentesis to get rid of a male foetus, just so that they could have a daughter in order to balance their family? No, never'.

Time and again it is stated that women themselves go for the test out of their own free will. It is a question of a women's choice. But are there choices made in a social vacuum? Women are socially conditioned to believe that unless they produce one or so male children, they have no social worth. They are harassed, and even deserted by their husbands and in-laws if they fail to produce a male child.

It is true that feminists all over the world demand the right of women to control their own bodies and choose whether or not to have children. They have also fought for free legal and safe abortions. But these issues should be viewed in a different context in developing countries becaure imperialism and racism are often major forces working to control coloured populations. Population control advocates often endorse women's rights and then divert attention from the real causes of the population problem. Lack of food, Economic security, drinking water and safe clinical facilities; these factors have created a situation where women must have between two and six children in order to have at least one surviving male child. This is a root of the population problem. The women's centres are undertaking educational campaigns to help combat this problem. Most women's groups feel that amniocentesis should be permitted only under strict governmental control and only for the detection of genetic abnormalities.

Eliminate inequality, not women.

*Courtesy;* **women in action**

"Marxism - Leninism teaches us that a theory isolated from practice is dead, and practice which is not illumined by revolutionary theory is blind."

"Women constitute half the world's population, perform nearly two-thirds of its work hours, receive one tenth of the world's income and own less than one hundredth (1%) of the world's property."
(U N Report 1980)

# உள்ளக் கதவை மெள்ளத் திறவுங்கள்



நங்கையே என் நிலை மிகவும் வேதனைக்குரியது. எனக்கு வயது 24 நான் ஒருவரை மனதார நேசித்தேன். அவரையே திருமணம் செய்யவும் போகின்றேன். பெற்றோர்களும் சம்மதித்து விட்டனர் நான் தான் நாட்களைத் தள்ளிக்கொண்டு போகின்றேன். எல்லோரும என் செயலை ஆச்சரியத்துடன் நோக்க ஆரம்பித்து விட்டார்கள் உண்மைக் காரணம் — எனது இருதொடைகள் பற்றும் சில இடங்களில் தேமலைப்போல் கறுப்பாகப் படர்ந்து பார்ப்பதற்கு மிகவும் அருவருப்பைத் தரும் வண்ணம் இருக்கிறது. இதற்கு என்ன செய்யலாம்.

எஸ்' சி

*உங்களது நிலை பற்றி குறிப்பிட்டுள்ள தகவல்கள் நீர் குறிப்பிடுவது எந்தவகைத் தோல் நோய் என அறியமுடியாமல் உள்ளது. எனவே சிறந்த தோல் நோய் நிபுணரிடம் (Dermatologist) காட்டி உடனடியாக பரிகாரம் பெறவும். (இப்படிப் பல பெண்கள் தமது நோய்களை வெட்கம் காரணமாக மறைப்பது பிற்காலத்தில் பல தொல்லைகளை ஏற்படுத்தலாம் எனவே உடனடியாக தகுந்த வைத்தியரிடம் காட்டி பரிகாரம் பெறுவது சிறந்தது.)*

எனக்கு வயது 28. திருமணம் முடிந்து இரண்டு மாதங்கள். கணவன் வெளியூர் சென்று விட்டார். எனக்கு ஏற்கனவே ஒருவருடன் நீண்ட நாட்களாக (2 வருடங்களுக்கு மேல்) தொடர்பு. அவர் ஏற்கனவே திருமணம் செய்தவர். பிள்ளைகளும் உண்டு. இப்போ அவர் மிகவும் கவலையுடன் திரிகிறார், குடிப்பழக்கமும் தொடங்கிவிட்டார் வீட்டைக் கூட சரியாக கவனிப்பதில்லை. என்னைப் பிரிந்த ஏமாற்றம் அவரை அதிகம் வாட்டுவது தெரிகிறது. இதற்கு நான் இனிமேல் என்ன செய்யலாம்? அவரை மீண்டும் நல்வழிப்படுத்தி அவர் குடும்பத்தைக் கவனிக்க வைக்க வேண்டும் பதிலை ஆவலுடன் எதிர்பார்க்கின்றேன்.

சி. வி.

*நீங்கள் குறிப்பிட்டுள்ளவருடன் உங்களுடைய தொடர்பு எந்தளவுக்கு உள்ளது என்பதையும் அவருடன் கொண்ட தொடர்பினால் உண்டான உறவின் நிலையையும் சிறிது ஆராய்வது உங்களுக்கு சிறந்ததென எண்ணுகிறேன் உங்கள் திருமணம் கணவருடன் உள்ள உறவின் நிலை போன்றவற்றை ஆராய்ந்து சிறந்த வழிவகைகளை காணுவது நல்லது. (இதற்கு ''நங்கை'' பெப்ரவரி இதழில் வரும் மனித உறவுகளும் பெண்களின் பிரச்சினைகளும் கட்டுரை உதவி செய்யும்) உங்கள் பிரச்சினைக்கு முடிவு காண்பது கடினமாக இருந்தால் ஒரு உளவள துணையாளரை (Counseller) அணுகவும். உளவள நிலயம் உங்களுக்கு வழிகாட்ட உதவும்.*

எனக்கு வயது 18. A.L படிக்கின்றேன். நான் ரியூட்டரிக்குப் போகும் வழியில் ஒரு வாலிபன் தொல்லை கொடுத்தான். அதைத் தாங்க முடியாது. அவனைச் சமாளிப்பதற்காக அவனைக் காதலிப்பது போல் நடித்தேன். இப்போ அவனிடமிருந்து விடுபட முடியாத நிலையில் இருக்கின்றேன். எனது மைத்துனர் வெளிநாட்டில் இருக்கின்றார். அவரைத் தான் நான் திருமணம் செய்யவேண்டும் என்பது எனது பெற்றோர் விருப்பம். என் நிலை தர்மசங்கடமாக இருக்கிறது இதற்கு நான் என்ன செய்யவேண்டும். எப்படி இச் சிக்கலைச் சமாளிக்கலாம் ?

வி. ந.

*நீங்கள் குறிப்பிட்ட வாலிபரைக் காதலித்தது போல் நடித்தது தவறுகும் அதற்குக் காரணத்தையும் குறிப்பிடவில்லை. சில சமயம் உங்களை அறியாமலேயே நீங்கள் அவர் மீது அன்பு கொண்டிருக்கலாம். முதலில் அவர் மீது நீங்கள் கொண்ட அன்பு எப்படிப்பட்டதென ஆராய்ந்து முடிவெடுக்கவும். பின் அது பற்றி அவருக்கும் பெற்றோர்க்கும் தெரிவித்து தெளிவான முடிவினை கொள்வது பொருத்தமானதாகும்.*

நங்கை

# நோயற்ற வாழ்வு

## டாக்டர் பதில்

எனக்கு வயது 41. கணவரின் வயது 42. திருமணமாகி ஆறு வருடங்களாகி விட்டன. ஒரு குழந்தை பிறந்து ஒரு வாரத்தில் இறந்து விட்டது. இன்னொன்று 3 மாதத்தில் கருச்சிதைவு ஏற்பட்டது. எனக்கு கருப்பையில் கட்டி (fibroid) இருந்து அதற்குச் சத்திர சிகிச்சையும் செய்து கொண்டேன். இனிமேல் எனக்கு குழந்தை பிறக்க வாய்ப்பு உண்டா? அப்படிக் குழந்தை பிறந்தால் அது ஆரோக்கியமான குழந்தையாக இருக்குமா? தயவு செய்து பதில் கூறுங்கள்.

நீங்கள் குறிப்பிட்டுள்ள தகவல்களின்படி சத்திர சிகிச்சை எந்த அளவில் எவ்வளவு காலத்திற்கு முன் நடந்தது என்பது தெரியவில்லை. பொதுவாக கருப்பை கட்டி (fibroid) இருந்து அகற்றப்பட்டால் மீண்டும் கருத்தரிக்க வாய்ப்புண்டு. ஆனால் சத்திர சிகிச்சை காரணமாக வலுவிழந்த கருப்பை வலுவடைய காலம் செல்லும். மற்றும் கருச்சிதைவு ஏற்பட்டிருப்பதனால் சிலசமயம் உங்களதும் கணவரினதும் இரத்தவகை (Rh Blood group) பொருத்தமற்றும் இருக்கலாம் அத்துடன் உங்களுக்கு 41 வயதாவதனால் சில சமயம் உருவாகும் குழந்தை ''மொங்கோலொயிட்'' என்னும் குறைபாடுடையதாக அமையலாம். எனவே சிறந்த வைத்தியரை (Gynacologist) அணுகி சரியான முறையில் ஆலோசனை பெறுவது நன்று.

எனக்கு வயது 24. என் கணவருக்கு வயது 30. திருமணமாகி 6 வருடங்கள். இப்பொழுது சின்னச் சின்ன விசயங்களுக்கெலலாம் கருத்து வேறுபாடு வருகின்றது. இதனுல் தினமும் அவர் வேலையால் வந்ததும் ஏதோ ஒரு மனஸ்தாபம் ஏற்பட்டு விடுகிறது. இதனுல் மன அமைதி இல்லாத இரவுகள்தான் அதிகம். இதற்கு காரணம் என்ன? என்னில் ஏதாவது பிழையுண்டா? அல்லது அவரில் பிழையா?

— செல்வி —

நீங்கள் குறிப்பிட்டுள்ள தகவல் உங்கள் பிரச்சினைக்கு போதுமானவையல்ல. பிரச்சினைகள் எந்தமாதிரியானவை, உங்களுக்கிடையில் காணப்படும் கருத்துப்பரிமாற்றங்கள் எப்படியான நிலையில் உள்ளன என்பது மிகவும் முக்கியம். எனவே நீங்கள் உடனடியாக ஒரு உளவளத் துணையாளரை (Counseller) அணுகுதல் நலம். இதற்கு பின்வரும் முகவரிக்கு செல்லலாம்.

'சாந்திகம்' உளவள துணைநிலையம் 21, 1ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

ஆய்வு 4

# யாழ்ப்பாணப் பெண்களின் கல்விப் பாரம்பரியம்

## பிறநாட்டுச் சமயக் குழுக்களின் பணிகள் - 1830வரை

1813 இல் வருகை தந்த அமெரிக்கன் சமயக் குழு பற்றி ஏற்கனவே கண்டோம். இவர்கள் தெல்லிப்பழையை மையமாக வைத்துத் தமது சமயப் பணியை ஆரம்பித்தனர். பாடசாலைகளையும் ஸ்தாபித்தனர்.

சமயக் குழுக் குருமாரின் மனைவியர் கிறிஸ்தவ போதனைக்காக வீடுவீடாகச் செல்வதுவழக்கம். அப்போது பெண்பிள்ளைகளைப் படிக்க அனுப்பும்படி துண்டுவது வழக்கம்.

> ''பெண்கள் படித்தல் இத்தேசத்தவரின் வழக்கமல்ல. அவர்கள் படித்தால்விவாகம் செய்ய ஒருவரும் முன்வரமாட்டார்கள்''

### திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம் (குறமகள்)

என வீடுகளிலுள்ள பெண்கள் டானியர் பூர அம்மையாருக்குக் கூறியதாக 1817-ம் ஆண்டு ஒக்டோபர் மாத நாளாகமத்தில் பூர் பாதிரியார் எழுதியுள்ளார்.
(C. D. V, P 25)

ஆறு பெண்களையும் ஒரு பையனையும் பெற்றெடுத்த மாகையப்பிட்டியைச் சேர்ந்த ஒரு தந்தை தமது ஒரே மைந்தனுக்கு நன்றாகக் கல்விகற்பிக்க வேண்டும் எனப் பூர் பாதிரியாரைக் கேட்ட போது, அதற்கு சம்மதம் தந்து, அப்பையனோடு பெண்பிள்ளைகள் இருவரையும் அனுப்ப வேண்டும். என நிபந்தனை விதித்தார். பல நாட்களாகக் குடும்பம் ஆலோசனை செய்து; பின் சம்மதம் தெரிவிக்கவே 1818 இல் அந்த இரு பெண்களும் பாடசாலைக்கு வரத் தொடங்கினர். இவர்கள் பற்றிய குறிப்பில்

> ''சமயக் குழுவினரின் வளவில் பூர் அம்மையாருடன் தங்கிச் சாப்பிட்டு, தையல் வீட்டுப்பணி ஆகியவற்றைக் கற்பதோடு தெல்லிப்பளை நாளாந்த பாடசாலையிலும் வந்து கல்விகற்றுச் செல்கின்றனர். அதனால் இப்போ அதிக தைரியம் பெறுகிறோம்.

எனப் பூர் பாதிரியார் நாளாகமத்தில் எழுதியுள்ளார்.

விதானையார் ஒருவர் இந்தப் பெண்களிடம் உறுதிக்குக் கைநாட்டு வாங்க வந்த போது கைநாட்டுக்குப் பதிலாகக் கையெழுத்துப் போட்டமையைக் கண்டு வியப்படைந்து தம் பெண்களையும் கல்விகற்க அனுப்பி வைத்தார்.

இப்படியாகத் தொடங்கிய பெண்கல்வி 1818-இல் வாரநாட்களில் 8 பெண்களும், ஓய்வு நாட்களில் 12 பேருமாகக் கல்விகற்றதாக பூர் பாதிரியாரின் அறிக்கைகள் கூறுகின்றன. 1819 வரை அமெரிக்கன் சமயக் குழுவினரின் 15 பாடசாலைகள் 633 பையன்களையும் 10 பெண்களையும் கொண்டவையாக இருந்தன.

1821-இல் அமெரிக்கன் குழுவைச் சேர்ந்த அம்மையார்கள் வட்டுக்கோட்டையில் உவின்சிலோ அம்மையாரின் தலைமையில் ஒரு மாதர் சங்கம் கூடினர். அதன் நோக்கம் மதமாற்றம் பற்றியும் பெண்கல்வி பற்றியுமாகும். அதன் பயனாக 1821-ஆம் ஆண்டு கிறிஸ்மஸ் தினத்தன்று பூர் அம்மையாருடன் வசித்த இரு பெண்களும அமெரிக்கன் சமயக் குழுச் சபையில் சேர்க்கப்பட்ட

னர். 'மிராண்டா செல்லாத்தைச் சவ்வோட் எனவும் 'மேரி பூர்' எனவும் பெயரிடப்பட்டனர். இவர்களை பின்னே வரும் ஆயிரக்கணக்கான தமிழ்ப்பெண்களுக்கு முன்னோடிகளாகவும் வழி காட்டிகளாகவும் அமைந்தனர். ஆனால் இச் சபையினரின் ஐந்து வருடக் கடுழியத்தின் பின்பும் சபையிற் சேர்ந்த சுதேசிகள் 11 ஆண்களும் 3 பெண்களுமே யாவார். ஆரம்பத்தில் அவர்கள் கட்டாய மதமாற்றத்தைக் கொள்ளவில்லை.

1823-இல் இவர்களது 5 விடுதிப் பாடசாலைகளிலும் 105 ஆண்களும் 28 பெண்களும் கல்விகற்றனர். 1824-இல் உடுவிலில் ஒரு பெண் விடுதிப் பாடசாலை அமைத்து இந்த மாணவிகளுள் 22 பேர் தெரிவு செய்யப்பட்டு அங்கே கற்பிக்கப்பட்டனர்.

உடுவில் பெண்கள் விடுதிப் பாடசாலை இலங்கையில் மாத்திரமல்ல ஆசியாக்கண்டத்திலேயே முதன் முதல் நிறுவப்பட்ட பெண்கள் விடுதிப் பாடசாலையாகும். இது யாழ்ப்பாணத்தில் பெண்கல்வியை ஊக்குவதற்கு ஒரு புறக்காரணியாக அமைந்தது.

முதன் முதலாகச் சபையில் சேர்ந்த பெண்ணாகிய மிராண்டா செல்லாத்தைக்குக் குலம், கோத்திரம், சீதனம் எதையுமே எதிர்பாராத.....குணத்தையும் கல்வியையும் மட்டுமே எதிர்பார்த்த நல்ல விவாகம் ஒன்று நடைபெற்றது. கல்வியால் விவாகம் தடைப்பட்டுவிடும் என ஐயுற்று வந்த மக்களுக்கு முற்றிலும் புதுமை வாய்ந்த இந்தவிவாகம் தெளிவைத் தந்து பெண்கல்வியை ஊக்குவிக்கும் அகக்காரணியாக அமைந்தது.

மிராண்டா வீட்டு அயலவரான உயர் குலத்துப் பெண்கள் சிலர் உடனடியாகவே உடுவில் பாடசாலையில் சேர அனுமதி கோரினர். 1825-ம் ஆண்டு தொடக்கம் விடுதிப் பாடசாலைப் பெண்களுக்கு உணவு உடை கல்வி முதலியவை இலவசமாக வழங்கப்பட்டதோடு அவர்களின் விவாக காலத்தில் 75/= (4 பவு 10 சி) அல்லது அதற்குரிய பொருள்கள் அவர்களுக்குச் சீதனமாக வழங்கப்பட்டது.

உடுவில் பாடசாலையில் ஆங்கிலம், தமிழ் வேத பாடங்கள், தையல், வீட்டுப்பணி என்பவற்றோடு விவேகத்திற்கும் அறிவுக்கும் உரிய பாடங்களும் கற்பிக்கப்பட்டன. ஒவ்வொரு மாணவிக்கும் வருடமொன்றுக்கு 20 டொலர் (4 பவுண் 3 சி 6 பெ) வீதம் செலவு செய்யப்பட்டது.

செலவுகள் எல்லாம் அமெரிக்காவின் செல்வந்தப் பெண்களினால் நன்கொடையாக வழங்கப்பட்டு வந்தது. ஞானஸ்நானம் பெற்ற பெண்களுக்கு அந்தந்த பரோபகாரிகளின் பெயர்கள் சூட்டப்பட்டன. இத்தகைய சம்பவங்கள் மக்கள் உள்ளத்தில் கல்வியாசையைத் தூண்டுவனவாக அமைந்தன.

சமயக்குழுக்கள் எல்லாம் ஒரே நோக்கத்துடன் வந்திருந்தாலும் 1830 வரை, எவையும் பிரமாதமாக ஏதும் செய்துவிடவில்லை. வெஸ்லியன் மெதடிஸ்ற் சமயக்குழுவுக்கு யாழ்ப்பாணப் பகுதியில் ஒரு ஆங்கில பாடசாலையும் 4 சுயமொழிப் பாடசாலைகளும் இருந்தன ஆங்கிலப் பாடசாலையில் போத்துக்கேய ஒல்லாந்தப் பரம்பரையினரான 42 மாணவர் படித்தனர். பருத்தித்துறையில் 321 மாணவரைக் கொண்ட 7 பாடசாலைகள் விளங்கின. இவர்களது அறிக்கைகளையும் சமூக அமைப்பையுங் கொண்டு பார்க்கும் போது யாழ்ப்பாணப் பகுதியில் ஒரு மாணவி தன்னிலும் பாடசாலைக்குச் செல்லவில்லை என்பது தெரிய வருகிறது.

திருச் சபைக் குழுவின் முதலாவது தொண்டர் வண. போசப் நைற் 1818இல் யாழ்ப்பாணம் வந்து நல்லூரைத் தமது வசிப்பிடமாகவும் சபைக்குரிய இடமாகவும் கொண்டார். இக் கால கட்டத்தில் அவரது சபைக்குரிய பிரதேசத்தில் 270 மாணவர் கல்வி கற்றனர் எனத் தெரிகிறது. இதில் ஆண் பெண் விபரங்கள் தெரியவில்லை.

ரோமன் கத்தோலிக்கக் குழு 1836 வரை கொச்சின் மேற்றிராசனத்தின் கீழ் இயங்கி வந்தது. போத்துக்கேயர் காலத்தில் மதம் மாறியோரும் போத்துக்கேயரின் வம்சாவழிகளும் ஒல்லாந்தக் கெடு பிடிகளுக்குத் தாக்குப் பிடித்து வாழ்ந்து வந்தனர். சில பெண்கள் புனித பீற்றர் சபைத்

தொண்டராசவும் இருந்திருக்கின்றனர். 1836இல் இலங்கைக்குத் தனி மேற்றிராசனமும் திரும்ப 1845இல் யாழ்ப்பாணத்துக்குத் தனி மேற்றிராசனமும் கொடுக்கப்பட்டது. 1830 வரை யாழ்ப்பாணத்தில் இவர்களுக்கு 23 பாடசாலைகள் இருந்தன. அங்கே பெண்கள் கல்வி கற்றதற்கான சான்றுகள் இல்லை தேவாலயங்களில் சமய போதனைகள் நிகழ்ந்திருக்கலாம்.

சமயக் குழுக்களின் வருகையோடு பொதுவாக யாழ்ப்பாண மக்களுக்கும் சிறப்பாகப் பெண்களுக்கும் பிரமாண்டமான மாற்றம் ஒன்று நிகழப்போவதை அக்குழுக்களின் ஆரம்ப செயற்பாடுகளிற் கண்டோம். இதர சமயக் குழுக்கள் இலங்கையின் தென் பகுதியில் தமது முழுக் கவனத்தையும் செலுத்தி நிற்க ''யாழ்ப்பாணத்துக்கு மட்டும்'' என அனுப்பிவைக்கப்பட்ட அமெரிக்கன் சமயக்குழு கிராம மட்டத்திலும் மக்களோடு நன்கு பழகி, மன மாற்றத்தோடு சேர்ந்த மத மாற்றத்திசகும் அடிகோலித் தமது முழுக் கவனத்தையும் இப்பிரதேசத்துக்கே நல்கியது. அதனல் பிற்காலத்தில் சிறந்த கல்விமான்களையும் சிந்தனையாளரையும் உத்தியோகத்தரையும் உருவாக்கி தலை நகரில் மட்டுமல்ல பிறநாடுகளிலும் செல்வாக்குப் பெற ஏதுவாக இருந்தது. அடுத்தடுத்த கால கட்டங்களில் குழுக்களின் செயற்பாடுகள் விரிவாக ஆராயப்படும்.

சைவப் பாரம்பரியத்தில் பெண்கள் எழுத்தறிவு உடையவராக விளங்கினர் என்பதற்குப் பாதிரியாரால் குறிப்பிடப்பட்ட இரு பெண்களையும் தவிர, வேறு ஆவணங்களில்லை. 1850 ஆம் ஆண்டின் பின்னரே வீட்டிலே அண்ணன்மாருடன் சேர்ந்து கல்வி கற்ற ஒரு பெண்ணைப் பற்றிக் கேள்விப்படுகிறோம். அரசவம்சத்தில் வந்தவர்கள் எனக் குறிப்பிடப்படும் இராமநாதன் குடும்பத்திலும் குறிப்பிட்ட கால வரையில் படித்த பெண்கள் யாரும் இலர்.

சட்டசபையின் முதலாவது தமிழ் அங்கத்தவராக திரு. குமாரசுவாமி முதலியார் இராமநாதனின் பேரன் ஆவார் இவரது மனைவியார் 1897 ஆம் ஆண்டு வரை வாழ்ந்தவர். கொழும்பு வாசம், வர்த்தக நிர்வகுப்பு, இராமநாதன் சோதரர்களை வளர்த்தெடுத்தவர். அவருக்கே எழுத்தறிவு இல்லை என்பது அக்காலச் சமூக நிலையைத் துல்லியமாகக் காட்டுகிறது. ◻

---

# இப்படியும் ஓர் ஆராய்ச்சி

கேப்ரில்லா ஃபெர்ரேர் லூஸி என்ற ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த 57 வயதான பெண் ''தமிழ்நாட்டுப் பெண்களின் தீட்டு'' எனும் தலைப்பில் மேற்படிப்புக்கான ஆராய்ச் சிக் கட்டுரையொன்றை எழுதியுள்ளார்.

'பெண்களுக்கு இயல்பாக ஏற்படும் மாதவிலக்குக்கு தமிழர் இவ்வளவு முக்கியத்துவம் கொடுப்பது எனக்கு அதிக ஆச்சரியத்தையளித்தது. எனவே தமிழ்நாட்டில் பல கிராமங்களுக்குச்சென்று ஆராய்ச்சி செய்தேன் நீங்கள் தீட்டெனக் கருதும் சமயத்தில் தான் பெண்கள் சுத்தமாகவும், காற்றோட்டமுள்ள இடத்திலும் இருக்கவேண்டும். இதற்கு மாருக தமிழ் கிராமங்களில் இத் தினங்களில் பெண்கள் ஒதுக்குப் புறத்திற்குத் தள்ளப்படுகின்றனர், இது தவறு'' என்கிருர்.

தமிழ் நாட்டில் மட்டுமல்ல ஈழத் தமிழகத்திலும் இந்நிலை காணப்படவே செய்கிறது.

மங்கையர் மலர், மே 89

---

# நிமிரும் நிழல்கள்

## சிறுகதை

அம்மன்கிளி முருகதாஸ்

நாளைக்குப் பரீட்சை ஆரம்பம். காலையில் மூன்று மணிக்கு அலாரம் வைத்து எழும்பிப் படித்ததோ என்னவோ தூக்கியடித்தது நித்திரை. ஆனாலும் என்ன செய்வது 'கனகேஸ்' திரும்பவும் ஒருமாதிரி முகத்தைக் கழுவிப் படிப்பதற்குத் தயாராகிறுள்.

இந்த விமலா என்னெண்டுதான் நித்திரை கொள்ளாமற் படிக்கிறுளோ தெரியாது. சாமப்பேய் மாதிரி இரவு ஒரு மணிக்குப் 'பாத்றூமில்' தண்ணீர் சளசள வென்று கொட்டும். முழுகி விட்டு வருவாள். 'என்னடி உனக்குச் சன்னிதான் பிடிக்கப் போகுது' என்றுலும் கேட்கமாட்டாள்.

தலைகாயும் வரைக்கும் முழிச்சுப் படிக்கலாம் என்பாள். இமைகள் மூடுகிறதோ என்னவோ கடவுளுக்குத்தான் தெரியும்.

ராஜினி இன்னெரு போக்கு. காலை எட்டு மணிக்குச் சோதினை என்றுலும் ஏழு மணிக்குத்தான் எழுந்திருப்பாள். ஏதோ முன்னரே எல்லாம் படித்து முடித்தமாதிரி. ஆனுல் என்னவோ தெரியாது றிசல்ட்டுக்குப் பிழையில்லை.

டாண் டாண் டாண் அம்மன்கோயில் மணி கேட்டது. 'ஓ சரியாய் விடிஞ்சு போச்சு'

சீர்காழியின் பாட்டும் சேர்ந்துவந்தது. திருநெல்வேலியில் கோயிலுக்குக் குறைவில்லை. எங்குபார்த்தாலும் கோயில். கோயிலுக்கும் பரீட்சைக்காலம் என்றெல்லாம் கணக்கில்லை. ஆனைமுகத்தான் தொடங்கி சகல பக்திப் பாடல்களும் அரங்கேறும். திருவிழாக்காலமும் அந்தக் காலத்தில்தான். எல்லாப் பக்கமிருந்தும் வரும் பக்திப் பாடலையும் சீரணித்துக் கொண்டு படிக்கவேண்டியதுதான்.

அவசர அவசரமாக மூவரும் வெளிக்கிடுகின்றனர். கனகேஸ் உயிரியல் விஞ்ஞானம் படிப்பவள். விமலா பொருளியல் இறுதியாண்டு. ராஜினி பொதுப்பட்டம் இரண்டாம் ஆண்டு. கனகேசுக்கு எட்டு முப்பதுக்குப் பரீட்சை. எட்டுப் பதினைந்துக்கு மண்டபத்தில் நிற்க வேண்டும்.

அன்றியின் பாணை அவசர அவசரமாகத் தொண்டைக்குள் திணித்துவிட்டுக் கொப்பியை ஒருதடவை பார்த்துக் கொள்கிறுள். என்னதான் விழுந்து விழுந்து படித்தாலும் கடைசி நேரம் பார்க்கிற 'திருப்தி' ஒருபோதும் வருவதில்லை.

பலாலி றேட்டில் ஒரே வாகன இரைச்சல். அதுவும் அமைதிப்படை முகாமின் தடைகளைத்தாண்டி இராமநாதன் றேட்டில் ஏறுவதென்றுல் அந்த எட்டு மணிக்குத் தனிப்பயிற்சி பெற்றிருக்க வேண்டும்.

சிவன் ஸ்ரேர்சில் கையில் ஃபைலுடன் சகமாணவர்

குருபரனும் ஸ்ரீஸ்கந்தரா சாவும் நிற்கின்றனர்.

'ஹலோ குட்மோணிங். எப்பிடி சோதினேக்குப் படிச்சாச்சோ' குருபரன் தான் கேட்கிறுன்.

'ஒருமாதிரிப் படிச்சது தான் என்ன கேள்வியைக் போட்டு அறுக்கினமோ தெரியாது, கனகேஸ் சப் புக்கொட்டினுள்.

'ஓம் நீர் நெடுக உப்பிடித் தான். சடைசியில போகேக் கை ஃபெஸ்ட் கிளாஸ் இல் லாமலா போகப்போறீர்' ஸ்ரீஸ்கந்தராசா கனகேசின் வயிற்றெரிச்சலைக் கிளப்புகி றுன்.

'எல்லாம் றிசல்ட்ஸ் வரத் தெரியும்தானே'

'அதுசரி உம்மடை பாட் னர் சோதினே எழுதிப் போட்டாரோ? இந்தமுறை யும் றிப்பட்டாம்'

'என்ன செய்கிறது குரு. அவர் சொல்லச் சொல்லப் படிக்கமாட்டாராம். ஒரே என்னைக் குறை சொல்லுற துதான் அவற்றை வேலை'

'என்னவோ நீர் காதலிக் கிறீர், நீர் புத்திமதியைச் சொல்லுமன்'

'சும்மா இரடா அந்தா ரகுநாதன்தான் வாருர். கனகேஸ் நீங்கள் மெல்லமா அந்தப்பக்கயாப் போங்கோ எங்களோடை கதைச்ச தைப் பார்த்தாலும் உமக்கு வில்லங்கம்'

'அவர்கள் சைக்கிளில் சென்றுவிடுகின்றனர்.

நேரம் 11.30. பரீட்சை முடிந்து வெளியே வந்தாள்.

மாணவரும் மாணவிய ரும் நடந்த பரீட்சைபற் றித்தான் கதை.

இவளுக்குத் தெரியும் ரகு நாதன் லைப்ரரி வாசலில் தனக்காகக் காத்துநிற்பான். இரண்டு வார்த்தை கதைக் கவேண்டும். இல்லாவிட் டால் இரண்டு கிழமைக்கு மூஞ்சியை நீட்டிவைத்துக் கொள்வான். சகமாணவர் முன்னிலையிலேயே அவளை அவமானப்படுத்திப் பேசு வான்.

'இப்போதெல்லாம் அவ னையேன் காதலித்தோம் என்றுகூட எண்ணத்தோன் றுகிறது.

கம்பஸ்சுக்கு வந்தபோது ஒருவரையும் தெரியாது. ஸீனியர் மாணவர் எல் லோரும் எந்தப் பெண்ணை ராகிங் பண்ணலாம் யாரைக் காதலிக்கலாம் என்பதிலேயே குறியாக இருந்தசமயம், இவளும் ஒரு சீனியர்க் கும்பலிடம் அகப் பட்டு விட்டாள்.

ரகுநாதனுக்கு கனகேசை முன்னரே தெரியும். முத லில் தெரியாதமாதிரி நின்ற அவன் பின்னர் நல்ல பிள் ளையாக வந்து 'விடுங்கடா பாவம்' என்று விடுவித் தான்.

அந்தக் கும்பல் கேட்ட 'வொல்கரான' கேள்விக ளுக்குப் பதில் சொல்வதை விட — நாக்கைப்பிடுங்கிச் சாகலாம் என்று நினைத்த நேரத்தில் ரகுநாதன் செய்த உதவி பெரியதாகத்தான் இருந்தது அவளுக்கு. அந் தப் பழக்கம் அரும்பாகி பூவாகிப் பழமாகி நிற்கி றது.

ஆரம்பத்தில் மிகமிக நல் லவனுகத்தான் அவளுக்குத் தெரிந்தான் அவன். ஆனுல் வரவர எப்படியென்றே சொல்லமுடியவில்லை. கலட் டியில் வேறுசில பெடியளு டன்போய்த் 'தண்ணி' அடிப்பதாகவும் கேள்வி, படிப்பும் ஒழுங்கில்லை.

தான் படிப்பது ஒழுங்கில் லாத காரணமோ என்ன வோ, இவளது பெறுபேறு கள் அவனுக்கு அவ்வளவு சந்தோசத்தைக் கொடுப்ப தில்லை.

காதலித்ததால்தான் கேட் டதற்கெல்லாம் இணங்க வேண்டும் என்பது அவன் மனப் போக்கு. இவளைப் பொறுத்தமட்டில் தனக்குச் சரியென்றுபட்டால் ஒழிய ஒப்புக்கொள்ளமாட்டாள்.

அன்றொருநாள் இருவருக் கும் பெரியசண்டை.

சனிக்கிழமை நேரம் 1மணி லைப்ரரியில் ஒவர்னைற் புத்த கம் எடுப்பதற்காக வந்த அவள் புத்தகத்தை எடுத் துக்கொண்டு பரமேஸ்வரன் கோயிலின் முன்னுள்ள மரத்தின் கீழ் நின்றபோது ரகுநாதன் தனது நண்பன் சிவானந்தனுடன் வந்தான்.

'ரகு கேட்டுப்பார் மணி சியை நீ வரேல்ல எண்டால் சொல்லிப்போடு. நாங்கள் போக வேணும்' என்று சிவா

னந்தன் சொன்னது காதில் விழுந்தது.

'ஏன் என்ன விஷயம் என்ருன் ரகுநாதனைப் பார்த்து.

'ஒன்றுமில்லை என்ற அவன் நீ போ சிவா நான் 3 மணிக்கு வாறன்' என்ருன்.

'என்ன புத்தகம் எடுத்திட்டீரோ'

ஓம்

'பசிக்கேல்லையோ வாருமன் கன்ரீனுக்கு ஒரு ரீயும் வடையும் எடுப்பம்'

'சாப்பிட்டால் நல்லது தான்'

கனகா நான் ஒரு கேள்வி கேட்டால் ஓம் என்பீரோ.

'என்ன விஷயம் எண்டு சொன்னல் பிறகு சொல்லலாம்'

நீர் ஓமெண்டால் சொல்லுறன்

சரி ஓம் சொல்லுங்கோ.

3 மணிக்கு யாழ்ப்பாணம் ரவுனுக்கு வாறீரோ

அதுக்கென்ன நான் வாறனுன் தானே இண்டைக்குப் புதினமாக கேக்கிறியள்

இல்லை ஹொட்டலுக்கு

என்ன?

'என்ன என்னெண்டிறீர் உமக்குத் தெரியாது. சிவா தன்ரை லவர் ஷாமினியைக் கூட்டிக் கொண்டு எங்கையெல்லாம் போறவன் தெரியுமோ?

எங்கை?

ஹொட்டல் வசந்தாஸ்க்குத்தான்

போய்......

போய் என்ன? நீர் பபா நான் உமக்குச் சொல்ல வேணும்.

சீ! என்ன ரகு நீங்கள் ஆம்பிளையள் நாங்கள்...... என்ன நீங்கள் ஷாமினியைக் கேளும் சொல்லுவா. பாரும் 3 மணிக்கு சரியாச் சிவா ஷாமினியைக் கூட்டிக் கொண்டு வசந்தாசுக்குப் போருனே இல்லையோ

நீர் என்னை உண்மையாக் காதலிச்சால் வருவீர்'

'நீங்க நம்பினு நம்புங்கோ நம்பாட்டிவிடுங்கோ. ஆனல் ஹொட்டேலுக்குவந்து இரவுக்குத் தங்கித்தான் உங்களை நம்பவைக்க வேணுமெண்டால் அது என்னல ஏலாது.

சரி இண்டையோடை உம்மடை லவ்வும் குளோஸ் எண்டு நினையும்.

அவள் வெடுக் கென்று எழுந்து போய்விட்டாள்.



எண்டு. இண்டைக்குப் போன நாளைக்குத்தான் அவன் றூமுக்கு வருவான்.

'அப்ப ஷாமினி'

ஷாமினியும் தான். அன்ரிக்கு தான் வீட்டை போறன் எண்டு சொல்லிப் போட்டுப் போவா. காலமை திரும்பிப் போவா. அன்ரி ஷாமினியைத் தன்ர வீட்டை எண்டு நினைப்பா. வீட்டுக்காரர் அன்ரி வீட்டை எண்டு நினைப்பினம். விஷயம் முடிஞ்சுது.

'அதென்னவோ எனக்குத் தெரியாது. என்னல அப்படி 'எல்லாம் வர ஏலாது'

பிரமை பிடித்தது போலிருந்த இவளுக்குத் தான் செய்தது சரி என்றேபட்டது.

* * * *

என்று தணியும் இந்த...... என்ற தலைப்பில் தமிழ்மன்றக் கவியரங்கு கைலாசபதி அரங்கில் நடைபெற்றது.

கிருபாகரன், ஜயந்தன், வல்லிபுரம், குருவரன் எல்லோரும் பங்கு பற்றினர். உண்மையில் ஜயந்தனின் கவிதை நன்ருகத் தான் இருந்தது. ஒரே கைதட்டல். எல்லோரும் ஜயந்தனைப் பாராட்டினர். இவளும் கல்மிஷமில்லாமலே எல்லாரையும்

போல 'நல்லாயிருந்தது ஜயந்தன் பாட்டு' என்று அனுக்குக் கைகுலுக்கித் தன் மகிழ்ச்சியைத் தெரிவித்தாள்.

எங்கோ நின்ற ரகுநாதனின் கண்களில் இந்தக் காட்சி.

'என்ன புதிசாத் தொடங்கியாச்ச கைகுலுக்க...... மின்சாரம் பாயுதாக்கும் உடம்பெல்லாம்......

'சீ என்ன ரகு இந்தமாதிரிக்கேட்கிறீர் எல்லாரையும் போலத்தானே கனகேஸ் கைகுலுக்கிறு.'

'சும்மா இரடா நீ. என்ர விசயத்திலே நீ தலையிடத் தேவையில்லே.'

அடிக்கக் கை ஓங்கி விட்டான். பக்கத்தில்நின்ற விஜயேந்திரன் தான் அவனைப் பிடித்து இழுத்து விட்டான் 'கனகேஸ் இங்கை வா' என்ன?......

'உன்னை யார் அவனுக்குக் கைகுலுக்கச் சொன்னது.'

'ஏன் குலுக்கினு என்ன'

'நீ இப்ப எல்லாம் வாய்க்கு வாய் பேசிறுய்'

'நீங்கபட்டும் சரியாத்தான் செய்யிறியள்.'

'என்னடி' பாளர் என்று ஒரு அறை! கன்னத்தில் அவனது ஐந்துவிரலும்.

'சீ நாயே! எப்படி அந்த வார்த்தைகள் அவள் வாயிலிருந்து வெளிவந்ததோ தெரியாது 'அருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாய் பேய். உன்ர பார்வைக் கோளாறுக்கு நான் ஒண்டும் செய்ய ஏலாது போடா'

அவள் நிமிர்ந்து நிற்கிருள். □

## கொரியா

கொரியா நாட்டில் 1988 ஆம் ஆண்டு அரச அறிக்கைகளின் படி, பெண்கள் மொத்த குடித்தொகையில் 45 சதவீதமானவர்கள், 14 — 65 வயதிற்கு இடைப்பட்டவர்கள் தொழில் பார்ப்பவர்களாக உள்ளனர். தொழில் பார்க்கும் பெண்களில் 74.6% விவாகமானவர்களே, ஆயினும் அண்மைக்கால ஆய்வுகளின் படி கைத்தொழிற் பிரதேசங்களில் விவாகமான பெண்களில் 57% சம்பளம் வழங்கும் தொழில்களில் ஈடுபடவில்லை. இதற்கான காரணம் அவர்கள் தமது பிள்ளைகளைப் பராமரிக்க வேண்டியிருப்பதே.

— Korean Women Today

## ஹொங்கொங்

ஹொங்கொங் நாட்டில் 1989ஆம் ஆண்டின் அரச அறிக்கையின்படி, 1.02 மில்லியன் பெண்கள் தொழில் பார்ப்பவர்களாகவும், மொத்த தொழிற்சக்தியை வழங்குபவர்களில் இவர்கள் 36.5% மாகவும், மொத்த பெண்கள் குடித்தொகையில் 47 6% மானதாகவும் காணப்படுகின்றது. ஊதியம் வழங்கும் தொழில்களில் ஈடுபடுவதற்கு விவாகம் இன்றும் பெண்களுக்குத் தடையாக இருப்பதாக அறிக்கைகள் காட்டும் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. இங்கு பெண்கள் பெறும் சராசரி வருமானம் ஆண்களை விடக் குறைவாகவுள்ளது.

— Labour Focus

# சந்திப்பு

## கமலினி செல்வராஜன்

1. கேள்வி: திருமதி. கமலினி செல்வராஜன் அவர்களே, நீங்கள் ஒரு திரைப்பட நடிகையாக, வானொலி நாடக நடிகையாக, வானொலி அறிவிப்பாளராக இலங்கைத் தொலைக்காட்சி அறிவிப்பாளராக பல வகைகளில் காட்சியளிக்கின்றீர்கள் இலங்கையில் பெண்கள் சுதந்திரம் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன? (பெண்கள் நசுக்கப்படுகிறார்கள் ஒடுக்கப்படுகிறார்கள் என நினைக்கிறீர்களா அப்படியானால் எந்தவகையில்?)

பதில்: இந்தக் கேள்விக்குப் பதில் ஒரு புத்தகமளவுக்கு எழுதலாம். 'சுதந்திரம்' என்றால் என்ன? "நான் எனது கையை விருப்பம் போலச் சுழற்றலாம்; எந்தத் திசையிலும் திருப்பலாம்; ஆனால் அச்சுதந்திரம் மற்ற ஒருவரின் மூக்கு நுனிவரையில் தான்" என்று பேர்னட்ஷோ கூறியிருப்பது ரசனைக்குரியது மட்டுமல்ல; சிந்தனைக்குமுரியது. பொருளாதார வளமும் கல்வியறிவும் உள்ள குடும்பங்களில் 'பெண்சுதந்திரம்' தாராளமாக நிலவுவதைக் கவனித்திருக்கிறேன். அதே பொருளாதார நிறைவுள்ள இடங்களில் இந்த சுதந்திரத்தால் ஏற்படும் தறிகெட்ட தலைகீழான போக்குகளையும் அவதானித்திருக்கிறேன். அதேவேளை, பொருளாதார நிறைவையும் — கல்வியறிவையும் பெறாத பெண்மை 'சமூகக்கட்டுப்பாடுகள் — பெறுமானங்களால் நசுக்கப்படுவதை — ஒடுக்கப்படுவதைக் கண்டு நொந்திருக்கின்றேன்'. ஆனால், அதே போல 'ஆணினம்' கூட; பொருளாதாரம் — கல்வி — அரசியல் — இனம் — சாதிவெறிகளினால் நசுக்கப்படும் போது பெண் சுதந்திரத்தை மட்டும் பெரிது படுத்துவது பொருந்தாது. சமூகம் — சமூகப் பெறுமானங்கள் சமூகக் கட்டுப்பாடுகள் — இனங்களுக்குரிய தனித்துவ பாரம்பரியங்கள் இவை எல்லாமே சீர்பட்டால்தான் இந்த நசுக்கலும் ஒடுக்கலும் தீரும். புதிய சமூகக் கோட்பாடு, சமூக மாற்றம், பொருளாதார சீர்மை — கல்விமேன்மை என்பவற்றால் சமூகத்தில் ஏற்படக்கூடிய "புதிய பரிமாணங்கள்" பெண்மைக்குச் சரியான நிர்ணயத்தைத் தரச் செய்ய வேண்டும். அதற்கு, சரியான பார்வையுடைய மாமனிதரின் வழிகாட்டல்கள் வேண்டும்.

2. கேள்வி: நீங்களும் கலையுடன் மிகவும் ஈடுபாடுடையவர் அதுபோல் உங்கள் கணவரும் தினமும் பல விடயங்களிலும் தன்னை ஈடுபடுத்திக் கொள்பவர் அந்தவகையில் குடும்பப்பணிகள் பங்களிப்புகள் பற்றி?

பதில்: வேலைப்பளுக்களிடையே, என் குடும்பப்பணிகளில் தனி இன்பம் காண்பவள் நான். 'உயர்வான சமூகமாற்றம்' நல்லகுடும்பங்களிலிருந்து ஆரம்பமாகும் என நம்புகிறேன் ஆண்களிடம் காணவே முடியாத அசாதாரண பெண்மைச் சக்தியின் பலத்தில் நம்பிக்கையுள்ளவள் நான். ஆண்களைவிட, பெண் நினைத்தால் எதையுமே சாதிக்கக்கூடியவள். இதனை முழுமையாக நம்புவதால் என்னால் மற்றவர்களை எதிர் பார்க்காமல் குடும்பப்பணிகளைச் செய்ய முடியும். சுவையாக — ரசித்துச் சமைத்து — விருந்தாளிகளை உபசரித்து — வீட்டை ஒரு கலைக் கூடமாகக் கூடியவரையில் அமைத்து — வீட்டினரின் குதூகலமான உரையாடலோடு உண்பது — உறவாடுவது போன்ற எல்லாக் காரியங்களும், என் வேலைப்பளுக்களினிடையே இனிமையளிப்பவை. நான் எனது குடும்பப்பங்களிப்புகளை ரசிக்கிறேன். I really enjoy it

3. கேள்வி: கலையுலகம் பாரம்பரியங்களைச் சீரழிக்கலாம் என நினைக்கின்றீர்களா?

பதில்: நிச்சயமாகச் சீரழிக்கக்கூடும் சரியான சமூகப் பார்வையும் வழி நடத்துதலும் கலைப்புலமையும் இல்லாத கலைஞர்களால் கலையுலகமும கலைப்பாரம்பரியங்களும் சீரழியத்தான் நேரும். இன்றைய உலகில், "கலைஞர்கள்தான"; முற்

காலத்திலே நாம் போற்றிய ரிஷிகள் — முனிவர்கள் — மாமனிதர்கள் ஆகியோரின் தானத்திலே இருக்கிறார்கள். எனவே, அத்தகைய வழிகாட்டலைச் செய்து, பழையநல்ல பாரம்பரியங்களைப் பேணி, பாரம்பரியச் சீர்கேடுகளை அகற்றிப் பாரம்பரியங்களின் தனித்துவத்தைக் காக்கவேண்டியவர்களும் கலைஞர்கள்தான் என்பதை மறுக்கமுடியாதல்லவா?

4. கேள்வி: பெண்களிடம் எதிர்பார்க்கப்படும் பாரம்பரிய கலாசார வரையறைகள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பதில்: பெண்களின் பாரம்பரிய கலாசார வரையறைகளில் சில பேணப்படவேண்டும். பல சீரமைக்கப்படவேண்டும், ஒருசில ஒழிக்கப்படவேண்டும்.

முன்னதற்கு உதாரணம் –

1. சகல மங்கல காரியங்களிலும் பெண்மை பெறும் முதலிடம்.
2. பெண்கல்வி.

இரண்டாவதுக்கு உதாரணம் –

உடைகள் — அணிகள் — காலதேச வர்த்தமானங்களுக்கமைய சீரமைக்கலாம்.

மூன்றாவதுக்கு உதாரணம் –

விதவைகள் உடை — அணி அலங்கார மறுப்பு, விதவைகள் மறுமண எதிர்ப்பு, சீதனக்கொடுமை, பொருளாதார சொத்துரிமைக் கட்டுப்பாடு ஒழிக்கப்படவேண்டும்.

5. கேள்வி: உங்கள் கலையுலக வளர்ச்சியில் கணவர் சில்லையூர் செல்வராசன் அவர்களது பங்களிப்பு?

பதில்: சிறுவயதிலிருந்தே அறிவுநாட்டமுடையவள் நான். ஓர் இலக்கிய இலக்கணப்பண்டிதராகத் திகழ்ந்த, 'முதலியார் தென்புலோலியூர் மு. கணபதிப்பிள்ளை' என் தந்தை. தாய், கலை இலக்கியங்களில் தேர்ச்சி பெற்ற ஒரு முன்னாள் ஆசிரியை. தாய் தந்தையரின் கட்டுப்பாட்டில் இலக்கியங்கள் கற்று, நடனம், இசை பயின்று, பாடசாலைக்கல்வியும் பெற்று, பல்கலைக்கழக 'கலைமாணிப்பட்டம்' முதற்பிரிவிலே பெற்றிருக்கிறேன். ஆனாலும் சுடர் விளக்காயினும் நன்றாய் எரிந்திடத் தூண்டுகோல் ஒன்று வேண்டும்' என்பார்கள். தூண்டுகோலாய், என் கலையுலக நுழைவுக்கும் வளர்ச்சிக்கும் காரணமானவர் என் கணவர்தான்.

6. கேள்வி: இறுதியாக "நங்கை" வாசகர்களுக்கு பெண்கள் சுதந்திரம் பற்றி கூறவிரும்புவது.?

பதில்: எனக்குத் தெரிந்த ஒரு பெண்மணி பெண் சுதந்திரத்துக்காகக் குரல் கொடுப்பதாகப் பெருமைப்படுகிறவர். திருமணமானவர்; ஆனால் இன்னும் தமது 'கன்னிமைப் பெயரிலே நடமாடுகின்றவர்; செயலாற்றுகிறவர். "ஆணின் பெயரைச் சேர்த்துக் கொள்வதால் பெண்ணின் தனித்துவம் அழிந்து போகிறது, எனவே, என் கணவரின் பெயரை என் பெயருடன் சேர்த்துக் கொள்வதில்லை" என்றார். நான் கேட்டேன் "சரிதான், உங்கள் தந்தையும் ஆண்தானே; அவர் பெயரைச் சேர்த்துக் கொண்டிருக்கிறீர்களே அதுவும் தேவையில்லையே". அந்தப் பெண்மணிக்கு என்னுடன் சிறு மனத்தாபமும் ஏற்பட்டிருக்கலாம். ஆனாலும், என்னால் அப்படிக் கேட்காதிருக்கமுடியவில்லை "வெறும் அடையாளச் சுதந்திரங்கள், அடிப்படைச் சுதந்திரங்களாகிவிட முடியாது.

நங்கையரே பெண்விடுதலை என்று போலித்தனமாக — சிறுபிள்ளைத்தனமாக — மேலுடையே பின்பற்றிநடக்க வேண்டாம். நம சமூகத்தில நம் குடும்பத்தில் — நம்மால் செய்யக்கூடிய மாற்றங்களைச் சிறிது சிறிதாகச் செய்வது நாளை பெண் சமத்துவத்துக்கு வழிகோல வேண்டும். பிறரை, கணவனை — மாமனை — மாமியை மாற்ற முடியாவிட்டாலும், நம்மகனை — மகளையாவது சமூக மூன்னேற்றம், சமூகப் பாரம்பரியங்களை மாற்றும் புதிய பார்வை, பெண் சமத்துவம் என்பனவற்றைப் புரிந்து கொள்பவர்களாக மாற்றலாம். பெண்களாகிய நாம் நமக்குள்ளே இருக்கும் பல தளைகளிலிருந்தும சுதந்திரம் பெற வேண்டும். கல்வியின்மை — பெண்ணுக்குப் பெண் புறம் கூறித்திரிதல், பெண்ணைப் பெண் இழிவுசெய்தல் — அடிமைசெய்தல், மாமியார் — கொடுமை, மருமகள் கொடுமை, முதுபோரைப் பேணாமை, கலாசாரப் புறக்கணிப்பு, குடும்பத்தைப் புறக்கணித்தல் ...... இப்படி எத்தனையோ தளைகள், பெண்கள் நமக்குள்ளே. இவற்றிலிருந்து முதலில் நாம சுதந்திரம் பெறவேண்டுமே! □

# சமூக முன்னேற்றத்தில் மாதர் பங்கு

கலாநிதி செ. வே. காசிநாதன்

சமூக முன்னேற்றம் என்றால் என்ன? ஒரு மக்கள் கூட்டம் எவற்றைப் பெறுவதால் தான் தற்போதிருக்கும் நிலையில் திருத்தம் ஏற்படும் எனக் கருதுகிறதோ அவற்றைப் பெறுவது முன்னேற்றமாகும். நாம் வேண்டும் சில எம்மிடம் குறைவாக இருத்தலும், நாம் வேண்டாத இயல்புகள் எம்மிடையே ஒட்டிக்கொண்டிருத்தலும் குறைபாடுகளாகும். இக்குறைபாடுகளை நீக்குதல் எனும் அடிப்படையிலேயே எவ்வகை முன்னேற்றமும் திட்டமிடப்படுதல் வேண்டும். ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கான திட்டங்கள் வெறும் கற்பனையில் உதிப்பனவாதல் சரியன்று; முகிலிலிருந்தோ, வேறெந்த நாட்டிலுமிருந்தோ எமது செவிகளுக்கு எட்டும் கனவுகள் யாவும் எமது முன்னேற்றத் திட்டங்களாக அமையமுடியாது. அமெரிக்க நாட்டுப் பெண்களோ, யப்பானிய நாட்டு மாதரோ விரும்புகிற காரியங்களை, அவர்கள் வாழ விரும்பும் வகைகளை எமக்கும் உவப்பான காரியங்களாக, வாழ்க்கை வழிகளாகக் கொள்வது அபத்தமாகும் கணவன், குழந்தை, குடும்பம் என்பன எல்லாம் தேவையில்லாதன என நினைக்கும் பெண்கள் சமூகங்கள் உலகின் சிலபாகங்களில் இருத்தல் சாத்தியம். எமது நாட்டிலும் சிலர் இத்தகைய போக்குகளை ஏற்க வல்லவர்களாகத் திரிந்திருத்தலும் கூடும். ஆனால் இவற்றை எம்நாட்டவர் அனைவருக்கும் பொருத்தமான நன்மையான இலட்சியமெனக் கருதுவது குழப்பமான சிந்தனையாகும்.

இதேபோல பெண்களின் அடிமை நிலை போன்றவற்றைப்பற்றிக் குறிப்பிடுகையிலும் இது, எமது சமூகம் தற்போதுள்ள நிலைகளில் எவ்வளவு பொருத்தமானது என்பதைக் கவனித்தல் வேண்டும். உண்மையில் இல்லாத நிலைகளை இருப்பதாக் நினைத்துக் கோஷமிடும் புத்தி பேதலிப்பிற்கும் நாம் ஆளாகக் கூடாது. ஒரு நாட்டின் சட்ட நிறுவன அமைப்புக்கள்கூட அந்நாட்டின் சமூக நிலைகளை அப்படியே பிரதிபலிப்பதாகக் கூறமுடியாது. சட்டப்படியும், அமைப்பைப் பார்க்கும்போதும் ஆண்கள் முக்கியமானவர்களாகக் காணப்படும் சமுதாயங்கள் பலவற்றிலே நடைமுறையில் உண்மையில் பெண்களே அதிக சக்தி உடையவர்களாயிருப்பதையும் அவதானிக்க முடியும்.

பெண்களுக்கும் ஆண்களுக்குமிடையே ஒரு வேறுபாடு இருக்கின்றதென்பதைக் கண்டுகொண்ட பிரெஞ்சுக்காரர், இச்சிறு வித்தியாசம் வாழ்கவென வாழ்த்தியுள்ளனர். இவ்வாழ்த்திற் சேர்ந்து கொள்ளும் அதே நேரத்தில், சிலர் கருதுவது போன்றன்றி, இது ஒரு பெரிய வித்தியாசமென நான் கருதுகின்றேன். இவ்வித்தியாசத்தின் ஓர் விளைவே பெண்கள் ஆண்களிலும் பலவீனமானவர்கள் என்பதாகும்.

பலவீனமானவர்களென கூறியவுடன் இது பெண்ணை தாக்குதற்கென ஆண்கள் செய்யும் ஒரு சதி எனச் சிலர் கூறுவதுண்டு. ஆனால் இதனை ஏற்க முடியாது. பல்லாண்டுகளாக நடைபெற்று வரும் ஒலிம்பிக் போட்டிகளை அவதானிக்கும்போது இது நன்கு புலப்படும். ஆண்கள் அளவு வேகமாகப் பெண்களால் ஓட முடியாது; குண்டெறிய முடியாது. ஆண்களளவு உயரமாகப் பாயமுடியாது. இதனை அதிகம் வாதித்து நேரத்தை விரயம் செய்யாது ஆண்களைவிடப் பெண்கள் பலவீனமானவர்களென ஏற்றுக்கொண்டு பெண்களின் பணிப்பற்றி நோக்குதல் வேண்டுமென முதலிற் கூறிலாம். ஆனால் இந்த வேறுபாடுகூட நாம் கற்பனை செய்யக்கூடிய ஒரு உலகில், விரைவில் சாதிக்

கக்கூடிய ஒரு உலகில் அதிக முக்கியத்துவம் இல்லாததொன்ருகப் போகலாம். அதிக சக்தி விரயத்தோடு மனிதர் செய்யும் பணிகள் அனைத்தையும் இயந்திரங்களால் செய்யக்கூடிய காலம் விரைவில் வரும். அத்தகையதோர் உலகில் ஆண், பெண் பலவீன வேறுபாடு அதிகம் வலியுறுத்த முடியாத ஒன்ருகப் போய் விடும். ஆனுல் எவ்வகையிலும் மாற்றமுடியாத வேறுபாடு ஒன்று ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே உண்டென்பதை நீங்கள் உணர்வீர்கள். எமது ஊரிலே கூறுவர்: 'அழுதழுதும் பிள்ளை அவளே 'பெறவேண்டும். கருத்தரித்துப் பிள்ளைபெறும் பணி ஆண்களாற் செய்ய முடியாதவொன்று. இதே போன்று பிள்ளைகளுக்குப் பாலூட்டும் கருமமும் பெண்களே செய்ய வேண்டும் பெண்களின உடலமைப்பால் பெண்பெறும் இவ்வாய்ப்பு, வருங் காலப் பிரஜைகளை உருவாக்கும் பணியைப் பெண்களுடையதாக்கும் இது எமது நாட்டுக்கன்றி எந்நாட்டிற்கும் பொருந்தும். இதனைக் கூறுகையில், பிள்ளை வளர்த்தல் உடைமாற்றல், சுத்தம் செய்தல் போன்ற பணிகளைப் பெண்களுக்கு விட்டு அவர்களை இரண்டாம் பிரஜைகளாக்கும் ஆண்கள் இது வரையில் செய்து வந்த சதியில் நானும் சேர்ந்து கொள்வதாக உங்களுக்குத் தோன்றும். ஆதலால் இவைபற்றிச் சிறிது விரிவாக ஆராய்வோம்.

பிள்ளைகளை வளர்த்தல் என்பது அவர்களது உடலை வளர்த்தல், அவர்களுக்கு அறிவு ஊட்டுதல் ஆகிய கருமங்களோடு முடிந்து விடுவதல்ல மனிதர்களுக்குப் பிறக்கின்ற குழந்தைகள் மனித உருவுடையனவாகக் காணப்படினும்; அவை மனிதர்கள் அல்ல. இவர்களை மனிதர்களாக்குகின்ற பணி அவர்கள் பிறந்தவுடனேயே ஆரம்பிக்கின்றது. மகத்தானதான மனித பாரம்பரியம் அவர்களுக்குச் சிறிது சிறிதாக ஊட்டப்பட்ட பின்னரே மனித சமுதாயத்தில் ஓர் அங்கமாவதற்கு மனிதக் குழந்தை தயாராகின்றது. மனித சமுதாயம் அதனது நீண்ட வரலாற்றினூடாக சேகரித்து வைத்திருக்கும் அறிவு நிதியங்கள் குழந்தைகளுக்கு ஊட்டப்படவேண்டியதன் அவசியத்தை ஒப்புக்கொள்ளும் அதே வேளையில் மனித உணர்ச்சிகளின் வளர்ச்சி என்கின்ற ஒன்று இருக்கின்றதென்பதனையும் மறந்து விடலாகாது. ஒரு வகையில் வேண்டுமாஞல் மனிதர்களுக்கு வேண்டிய அறிவிலும் பார்க்க மனிதன் பெறும் உணர்ச்சிக் கல்வி அதிக முக்கியத்துவம் வாய்ந்ததெனக் கூறிலும் மிகையாகாது. மனிதன் வாழ்வதற்கு வேண்டிய சாதனமாக அவனது அறிவு பயன்பட அவன் எத்தகைய மனிதனுக வாழப்போகின்ருன் என நிர்ணயிக்கப் போவது இந்த உணர்ச்சிப் பயிற்சியே எனலாம்.

எதை எதை அவன் விரும்பப் போகிருன், எந்த இலட்சியங்களை அவன் ஏற்றுக் கொள்ளப் போகிருன், தான் வாழும் சமுதாயத்தில் வாழும் ஏனைய மனிதரை அவன் எவ்வாறு அணுகப் போகிருன் என்பதை, என்ன காரியங்கள் அவனை மகிழ்விக்கப் போகின்றன, எதைக் கண்டு அவன் துன்புற்று இரக்கம் காட்டப் போகிருன், எதைச் செய்வதற்கு அவன் வெட்கம் அடையப் போகிருன், எதனைக் காப்பாற்றுவதற்காக அவன் போராடப்போகிருன், சுருங்கக் கூறின் அவனது ஆன்மா எப்படி இருக்கப்போகிறது என்பதை நிர்ணயிப்பது நாம் குறிப்பிட்ட உணர்ச்சிக் கல்வியேயாம். இத்தகைய கல்வியை ஊட்டுகிற பணி குழந்தையின் முதல் நாட்களிலிருந்தே ஆரம்பமாகின்றது. இதனை சாதிக்கின்ற கடமையும், வாய்ப்பும் பாரம்பரியமாக நாம் முன்னர் குறிப்பிட்ட உடலமைப்பு இயற்கை காரணமாக பெண்களைச் சேர்ந்திருக்கின்றது. குழந்தைகளைப் பெற்று வளர்க்கின்ற ஒவ்வொரு தாயும் இந்தப் பணியை செவ்வனே செய்வதன் மூலம் தனது நாடு எத்தகைய நாடாக இருக்கப் போகிறது என்பதை நிர்ணயிப்பவளாகின்ருள். இக்காரியத்தைப் பற்றி இவ்வளவு கூறியதன் பின்னரும்கூட இந்தப் பணியை செய்வதன் மூலம் பெண்கள் சமுதாயத்தில் இரண்டாம் இடத்தை பெறுகின்ருர்களென்ற எண்ணம் சிலருக்கு எஞ்சியிருக்கலாம். குழந்தைகளை வளர்த்துப் பெரியவர்களாக்கும் பணி அத்தனை பெரியதோர் பணியல்ல என்றும் வேருேர் வகையில் பெரிய காரியங்களைச் செய்யும்

பணி தமக்குத் தரப்படுதல் வேண்டும் என்ற உணர்வு பெண்களுக்கு எஞ்சியிருக்கலாம். இவ்வுணர்வு ஏன் ஏற்படுகின்றது?

என்னைப் பொறுத்தவரை ஒரு வர்த்தக ரீதியான — பூர்ஷுவாத்தனமாக வளர்ந்து விட்ட — அபிப்பிராயமே இந்த உணர்வுக்குக் காரணம் என்று தோன்றுகிறது. எத்தகைய காரியங்களை நாம் நல்ல காரியங்களாக முக்கியமான காரியங்களாக ஏற்க வேண்டும்? வாழ்க்கையின் பல்வேறு பருவங்களில் நாம் பெரிதாகக் கருதிய விஷயங்கள் இப்பொழுது எமக்கு பெரிதாக தோன்றுவதில்லை. உதாரணம் — விடலைப் பருவத்திலே உடலை மிகவும் பலமுள்ளதாக வளர்த்தலே மிகவும் பெரிய காரியமாகவும், இவ்வாறு வளர்க்காதவர்கள் இரண்டாந்தரப் பிரஜைகள் போலவும் பல இளைஞர்களுக்குத் தோன்றுகின்றது. இளம் பெண்களுக்கும் இத்தகைய ஆசைகள் இருத்தல் கூடும். எமது அறிவும், உணர்ச்சியும் முதிர்ச்சி பெற இத்தகைய இலட்சியங்களில் அனேகம் கைவிடப்படுகின்றன. வேறு காரியங்கள் முக்கியமானவையாகத் தோன்றுகின்றன. ஒரு தலையசைப்பிலே விரலசைப்பிலே எத்தனையோ மனிதர்களைத் தனக்குக் கைகட்டிச் சேவகம் செய்ய வைக்கும் சாதனை சிலருக்கு உவப்பானதாகும். பல நூற்றுக்கணக்கான மனிதர்களை கண நேரத்தில பொடிசெய்யக் கூடிய இராட்சசப்பீரங்கிகளை இயக்குவது இன்னும் சிலருக்குப் பெரிய காரியமாகத் தோன்றும். மணி அடித்தவுடன் வருகின்ற அழகிய பெண் ஊழியரும் நவீன சாதனங்கள் பலவும் சூழ குளிரூட்டப்பட்ட அறையில் கொலுவிருந்து தனனைச் சுற்றியிருக்கும் மூன்று தொலைபேசிகளில் தான் சொல்லுகின்ற வார்த்தைகளால் ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் உள்ள கப்பல்களின் போக்கையும் வரத்தையும் நிர்ணயிக்கின்றது போன்ற விவகார சாதனை பலருக்கு இலட்சியமாக இருக்கும். இத்தகைய கொலுக்கள் எதுவுமின்றி, தன்மீது எவ்வித பயமுமில்லாத இரண்டு மாணவர்களை வைத்துக்கொண்டு அவர்களோடு தனக்குப் பிரீதியான ஆராய்ச்சிகளில் ஈடுபடுகின்ற அறிஞன் தன்னை ஒரு இரண்டாம்பட்ச மனிதனாகக் கருதுவதில்லை. அவ்வாறாக அவன் கருதுவானேயாகில் அவன் ஒரு வர்த்தக சமுதாயதாயத்தின் குழப்பங்களில் தன்னை இழந்தவனாவான். பூர்சுவாத்தனமாக மிகவும் மேலெழுந்தவாரியாகச் சிந்திக்கின்ற ஒரு சடத்துவ சமுதாயத்தின் மதிப்பீடுகளை அப்படியே ஏற்றுக்கொண்டு இன்றைக்கு எமது சமுதாயத்தில் என்ன காரியங்கள் பெரிதாக இருக்கின்றனவோ அதனையே பெரிதென்று நினைத்துத் தாமும் அதனையே செய்யவேண்டுமெனப் பெண்கள் முற்படுவது முற்றையும் கோணலாக்கக்கூடிய முதற் கோணலாகவே அமையுமென எனக்குத் தோன்றுகின்றது

பெண்களுக்கு இருக்கக்கூடிய குறைபாடுகளுள் பல சட்டத்தால் மாற்றப்படக்கூடியன. இக்குறைபாடுகளைத் தீர்க்கும் போராட்ட முயற்சி பல்லாண்டுகளாக நடைபெற்று வருவதொன்று ஆண்களுக்கு அளிக்கப்படும் வாக்குரிமை பெண்களுக்கும் அளிக்கப்பட வேண்டும். ஆண்களுக்கு கொடுக்கப்படுகின்ற அளவு ஊதியம் பெண்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும். ஆண் செய்கின்ற தொழில்களுக்குப் பெண் அனுமதிக்கப்பட வேண்டும். ஆண் சேருகின்ற சங்கங்களில் பெண் சேர வேண்டும் இத்தகைய போராட்டங்கள் பல்லாண்டுகளாக பல்வேறு நாடுகளில் நடந்து பெருமளவுக்கு வெற்றியும் ஈட்டப்பட்டுள்ளது. ஆனால் தற்போதைய பெண்கள் தொடர்பான போராட்டம் இவற்றிலும் சற்றே ஆழமான காரியத்தைப் பற்றிய போராட்டமென எனக்குத் தோன்றுகிறது. பெண்கள் பெண்மை என்கின்ற பேரில் தம்மை ஒரு நுகர்ச்சிப் பொருளாகத் தாமே கருதிக் கொள்கின்ற நிலைக்கு எதிராக நடாத்துகின்ற ஓர் ஆன்மிகப் புரட்சியாக இப்போராட்டத்தை நான் கருதுகிறேன். அவர்களுடைய கைகளிலே மாட்டப்பட்டுள்ள புற விலங்குகளுக்கு எதிரான போராட்டமல்ல இது. அவர்களுடைய ஆன்மாவைப் பிடித்துள்ள அகவிலங்குகளுக்கு எதிரான போராட்டம் இது. ஆண் ஒருவருடைய பிரியத்துக்குத் தன்னைப் பாத்திரமாகக் கொள்வதே, வீதியில் போகின்ற வருகின்ற ஆடவரது பார்வைக்கு இனிய பொருளாகக் காட்சி தருவதே தனது இலட்சியமெனப்

பெண்கள் வாழ்ந்தது போதும் — மணித்தியாலக் கணக்கில் கண்ணாடி முன்னேயிருந்து மையும், சாயமும், மார்புக் கச்சையும் பூண்டுகொண்டு இனிநாம் இருக்கப் போவதில்லை என்று எழுகின்ற பெண்கள் தாம் என்ன இலட்சியத்திற்காக இவ்வாறு எழுச்சி கொள்கிறோம் என்று தெளிவடைய வேண்டும்.

ஆண்கள் எதனைப் பெரிதென மதிக்கிறார்களோ, வர்த்தக சமூகத்தில், வளர்ந்துவிட்ட மேலெழுந்த வாரியான நோக்கிற்கு எவை பெரிதாக்கப்படுகின்றனவோ அவற்றையே தாமும் செய்தல் வேண்டும் என ஆசைப்படுவது இவ்வெழுச்சியை விரயம் செய்வதாகும்.

இந்த அடிப்படையிலே குழந்தைகளை வளர்க்கும் பணியை இரண்டாம் பட்சக் காரியமாக நினைப்பது பொருந்தாது என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன். தற்போது நடைபெறுகின்ற பெண்களது போராட்டம் ஓர் ஆழமான ஆன்மீகப் புரட்சி என்கின்ற என் கருத்துச் சரியானால், என்னகாரியம் முக்கியம் என்பதைப் பற்றியும், எக்காரியங்கள் செய்யத் தகுந்தவை என்பதைப் பற்றியும் பெண்கள் புனராலோசனை செய்தல் மிக மிக அவசியம். இதனை இன்னொரு வகையில் சொல்வதானால், யாரோ செய்கின்ற காரியத்தைத் தாமே செய்யவேண்டுமென முயலாமல் தாம் இயல்பாகவும் செவ்வனேயும் ஏற்கெனவே செய்துகொண்டிருக்கிற காரியத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவது பெண்களுக்குப் பயன் உள்ளதாய் இருக்குமென எண்ணுகிறேன்.

இதுவரை பெண்களால் மட்டுமே எமது சமூக அபிவிருத்திக்கு ஆற்றப்படக்கூடிய பணியொன்றினைப் பற்றி கூறினேன். பெண்களுக்கும் ஆண்களுக்குமிடையே, உள்ள வேறுபாடு என நான் குறிப்பிட்டவற்றிலிருந்து எழுந்தவை இவை. இவற்றை விட பெண்கள் பிரத்தியேகமாக என நாட்டின் அபிவிருத்திக்குச் செய்யும் பணிகள் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. இவற்றை விட ஏனைய பணிகள் ஆண்கள், பெண்கள் என்னும் பாகுபாடின்றி ஆற்றப்படக்கூடியன. பெண்கள் அல்லது ஆண்கள் அபிவிருத்திக்கு ஆற்றக்கூடிய பணியென்றில்லாமல் நாட்டின் அபிவிருத்திக்கு பிரஜை ஒவ்வொருவரும் செய்யவேண்டிய பணிகள் பல உள. நாட்டின் உணவுற்பத்திக்கு, பிற ஆக்க வேலைகளுக்கு நாம் ஒவ்வொருவரும் எமது பங்கை ஈதல் வேண்டும். தேசிய அபிவிருத்தியில் எமது பங்கு என்பது தேசிய அபிவிருத்தியிலிருந்து எமக்குக் கிடைக்கக்கூடிய பங்கு என மட்டும் தொனிக்காது, தேசிய அபிவிருத்திக்கு நாம் தரக்கூடிய பங்கு எனவும் அர்த்தம் பெறல்வேண்டும். தேசிய அபிவிருத்தியில் பெண்கள் இவ்வாறு பங்கு கொள்வதைத் தடைசெய்யும் எவையேனும் இருப்பின் அவை நீக்கப்படல் வேண்டும். உதாரணமாக நிர்வாக சேவையில் 10 வீதமானவர்களே பெண்களாயிருத்தல் கூடும், எனும் கட்டுப்பாடு புனராலோசனை செய்யப்படவேண்டிய தொன்றாகும். அதைவிட நாட்டின் வளர்ச்சியின் பலவேறு துறைகளிலும் பெண்கள் பங்குகொள்வதற்கு எங்கெங்கெல்லாம் வாய்புக்கள் குறைவாயுளவோ — அங்கெல்லாம் அக்குறை தீர்ப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படல் வேண்டும், என்பதையிட்டு அதிகம் வாதிக்க வேண்டியதில்லை. இதுபற்றிக் குறிப்பிடப்படும்போது வழமையாக இதற்கு எதிராக கூறப்படும் நியாயம் ஒன்றை இங்கு சிறிது பார்க்கலாம். குறை விருத்தி நாடுகளில் ஆண்களுக்கே போதிய வேலைகள் இல்லாதிருக்கும்போது பெண்களும் வேலைசெய்ய வேண்டியதில்லை எனவும், ஆண்கள் யாவருக்கும் வேலை அளிக்கப்பட்டதன் பின்னர், பெண்களுக்கு வேலைகொடுப்பது பற்றிச் சிந்திக்கலாம் என்றும் கூறப்படுவதுண்டு. இந்த நியாயத்தில் உள்ள ஒரு குறைபாட்டைச் சுட்டிக் காட்டலாம். புத்தியைப் பொறுத்தவரை ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையே அதன் பரம்பலில் அதிக வேறுபாடு இருப்பதாகத் தெரியவில்லை. எனவே, நாட்டின் அபிவிருத்திக்கு வேண்டிய திறமைசாலிகள் அனைவரையும் பயன்படுத்த வேண்டி முற்படுகையில் ஆண்களை மட்டும் எடுத்துக்கொள்வது நாட்டின் மூல வளத்தில் சரி அரைவாசியை வீணாக்குவதாகலாம்.

ஒரு சமுதாய மக்களின் சுபீட்ச வாழ்வு பற்றிக் குறிப்பிடும்போது பொருட்களின் பற்றாக்குறையே பலருக்கு மனதுக்கு வருமெனினும் மனித வாழ்க்கை நுகர்ச்சிப் பொருட்கள் இருப்பதால் மட்டும் நிறைவடைவதில்லை. எம்மைப் பிடித்திருக்கும் அநேக மூட நம்பிக்கைகளும் போலியான மதிப்பீடுகளும் எமக்கு ஏற்படுத்தும் துன்பம் அதிகம் இவற்றைக் களைவதும் இவற்றினால் அநியாயமாக நமது வாழ்க்கையின் இனிய நாட்களை இழந்துபோகாத ஒரு நிலையை மக்களிடையே ஏற்படுத்துவதும் சிந்திக்கும் மனிதாபிமானம் உள்ள எவரினதும் இலட்சியமாய் இருத்தல் வேண்டும் எமது பிற்காலச் சந்ததியினரை இந்தவகையில் சுதந்திர மனிதராக மாற்றுகின்ற பணி மகத்தானது. இதன் முக்கியத்துவத்தை எப்படி வலியுறுத்தினாலும் மிகையாகாது. நுகர்ச்சிப் பொருட்களின் உற்பத்திபற்றி ஒரு வார்த்தை; நுகர்ச்சிப் பொருட்கள் எனப்பன ஸ்துலமானவை மட்டுமல்ல. கணிபங்களாக்கப்படக் கூடிய சிலவே ஆண்டறிக்கைகளிலும், மத்திய வங்கியின் புள்ளி விபரங்களிலும் தரப்படினும், இவையே பொருட்கள் என மயங்குதல் ஆகாது. நாட்டின் கலை கலாசாரம் என்பவற்றில் ஏற்படும் வளர்ச்சி மிகவும் கணிசமான அபிவிருத்தியாகும். கலையும் கலாசாரமும் வளராத சமுதாயத்தில் நுகர்ச்சி என்பதே சாத்தியமில்லை, அலலது அது மிகத் தாழ்ந்த ஒரு அளவிலேயே நடைபெறுகிறது எனலாம்.

எனவேதான் இத்துறைகளில் நாட்டின் வளர்ச்சிக்கு தத்தம் பங்கைச் செலுத்துவதன் அவசியத்தையும் பெண்கள் குறைத்து மதிப்பிடலாகாது. □

## நாயகனே கலங்குகிறேன்

— பூநகர் கவிப்பிரியா —

வெண் நிறப் பரப்பினிலே — நீ
 விருப்புடனே மனதை வைத்து
பேனு முனையாலே — நீ
 பெரு நிலத்தை உழுதெடுத்து
சோனு வாரியாக — நீ
 சொரிந்து விட்ட விதைகள் எல்லாம்

தானுக பயிராகும் — உன்
 தரமான விததென்று
நானுக புகழ் மாலை — என்
 நாயகனே உந்தனுக்கு
மானுக மருண் டோடி
 மனதாலே சூடினேனே

வீணுன வித்துக்களும் — அவ்
 விளை நிலத்தில் இருந்ததென்று
தானுகப் பயிராகாமல்
 தளிரிலே மறைந்த போது
நானுகக் கண்டு — என்
 நாயகனே கலங்குகிறேன்.

# பெண்ணிற்கு அழகு

— பண்டிதை மனேசபாபதி

''பெண்ணிற் பெருந்தக்க யாவுள'' என்று கேட்டான் வேதமெனப் போற்றிடத் தக்க குறள் நூல் தந்த வள்ளுவன்.

சித்தர்கள் கூட தங்கள் மனதைக் கட்டுப்படுத்திக் கொள்ள திராணியற்ற நிலையிலே தான் ''நந்த வனத்திலோர் ஆண்டி'' என்பன போன்ற பாட்டு வரிகளால் பாவையர்மீது வசைமாரி பொழிந்தனர். ''பெண்ணென்ற மாயப் பிசாசும்'' என்றவர்களின் யோக்கியதை கூட இதுதான். சாமியார்களும் சன்னியாசிகளும் தங்கள் தவறுகளை மூடி மறைப்பதற்கு பெண்கள்மேல் குற்றங்களையும் கட்டுப்பாடுகளையும் ஏன் வசைகளையும் கூட வாரிவழங்கியுள்ளதுதான் எமது தமிழ் புராண காவிய வரலாறுகளில் பெரிதும் காணப்படுகிறது. தவறு செய்தவன் தேவர்களின் தலைவன், தவறை உணராதவர் முக்காலமும் உணர்ந்த ஞானி, பழிசுமத்தப்பட்டவள்தான் அகலிகை. அப்பாவிப் பெண். இது போன்ற எத்தனையோ பக்தி இலக்கியங்கள் என்றும் இன்று எமது நெறியை வளர்க்கின்றன. எமக்கு வழிகாட்டுகின்றன.

நான் கடவுளை நம்பத் தயார் ஆனால் தாடி வளர்த்த சாமியார்களை கடவுளாக நம்பத் தயாராக இல்லை'' என்று மறைந்த பெண் பிரதமர் இந்திரா காந்தி சொன்னார். எத்தனை பொருள் பொதிந்த சொற்களிவை.

நீறில்லா நெற்றிபாழ் நெய் இல்லா உண்டி பாழ்
ஆறில்லா ஊருக்கு அழகு பாழ் - மாறில்
உடன்பிறப்பில்லா உடம்பு பாழ் பாழே
மடக் கொடி இல்லா மனை

என்று இல்லறத்தின் மேன்மையை இல்லாளின் சிறப்பை பாடினார் ஔவையார்.

நிலவில்லாத வானம் எப்படியிருக்கும். பெண்களில்லாத வீடும் அப்படித்தான் இருக்கும். இவ்வளவு பெருமையும் வாழ்வினுக்கு உண்டாவதன் மூலகாரணமே பெண்மைதான்.

இத்தகைய பெருமைக்குரிய பெண் சமுதாயம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகப் பல் வகையாலும் முன்னேறி வருவதைக் காண்கிறோம். பெண்களுக்கு ஏன் கல்வி என்ற காலம் போய் பெண்ணும் கல்வியும் என்ற காலம் வந்துள்ளது. பெண்விடுதலைக்கென பல பெண்களே தாமாக விடுதலை இயக்கங்களை வளர்த்து வெற்றியும் கண்டு வருகின்றனர். பெண்களுக்கு ஓரளவு சுதந்திரம் என்ற நிலைமாறி பூரணசுதந்திரம் என்ற நிலையுருவாகி வந்தபோதும் இன்று எமது சமுதாயத்தில் உள்ள சில சிக்கல்கள் — பிரச்சனைகள் தீர்க்கப்படும்வரை இந்த பூரண சுதந்திரம் பெண்களுக்கு கிடைக்குமா?

பெண்கள் எவ்வளவு முன்னேறினாலும் அவர்களால் கணவன் மதிக்கப்பட வேண்டும், கல்லானாலும் கணவன். புல்லானாலும் புருஷன், கல்லைப்போலிருந்தாலும் புல்லைப்போலிருந்தாலும் கணவனே கண்கண்ட தெய்வம் என்று இதற்குப் பொருள் கொண்டிருந்த காலம் ஒன்றிருந்தது. ஆனால் அதன் உண்மை விளக்கம் வேறாக இன்று கொள்ளப்படுகிறது. கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன் என்பதே சரியான வழக்கு. படிக்காதவனாக இருந்தாலும் சினங்கொண்டு தழுவாமல் விலகி நிற்பவனானாலும் கணவன் கணவனே என்பதே.

இந்த நெறியிலிருந்து மாறுதவரை பெண்கள் முன்னேற்றம் எவ்வளவு வேகமாக முன்னேறினாலும் கவலை இல்லை. நகரீக வேகம் சில பெண்களுக்கு மோகமாகி அதனால் அவர்கள் வாழ்க்கை சோகமாகி விடுகிறது. அப்படிப்பட்ட பெண்களுக்கு அறிவுக்கண் திறக்கவேண்டியது அவசியமாகும். ஏனென்றால்

"மங்கையராகப் பிறப்பதற்கே - நல்ல
மாதவம் செய்திட வேண்டுமம்மா!"

என்று பாடி பெண்டிராய்ப் பிறப்பது பெருமைக்குரியது என்பதனைக் குறிப்பிட்டார் கவிமணி தேசிய விநாயகம்பிள்ளை. மானிடராய் பிறப்பதரிது என்று பொதுப்படக் கூறாமல் மங்கையராய்ப் பிறப்பதே சிறப்புக்குரியது என்று கூறுகின்றார். அந்தப் பிறப்பு வீணான நாகரீக மோகததால் அலக்கழிந்து போகக் கூடாது. 'பெண்மை என்பது அனைவராலும் விரும்பத்தக்கதோர் அமைதித்தன்மை" ஆண்டவனின் படைப்பில் அரியது ஒன்று உண்டென்றால் அது பெண்தான் என்று மகாத்மா காத்தியடிகள் பெண்டிரை உயர்த்திச் சொல்லியதற்குக் கூட இத்தகைய பண்புதான் காரணம். பெண்களுக்கு நெளிநெளியான நீண்ட கூந்தலழகோ, மஞ்சள் மின்னும் முகத்தழகோ, அன்னநடை மின்னலிடை என்று வர்ணிக்கும் அழகுகளோ இருந்தால் போதாது. நல்லியதத்தோடு கற்றுத் தம் குணப்பண்பை உயர்த்திக்கொள்ள வேண்டும். அதுதான் பெண்களுக்கு அழகு. □


## அயோடின் : அவசியம்

கருவுற்ற தாய்மார்களுக்கு அயோடின் குறைவு ஏற்பட்டால் கருச்சிதைவு ஏற்படும். பிறக்கும் குழந்தைகளுக்கு மூளை, உடல்வளர்ச்சிக் குறைவு ஏற்படுகின்றது. குழந்தை இறப்பும் ஏற்படலாம். உடலுக்குத்தேவையான மிக அத்தியாவசியமான சத்துக்களில் அயோடின் மிக முக்கியமானது. கழுத்துக்குக் கீழேயுள்ள தைராய்டு சுரப்பி, உடலுக்குப் போதுமான அளவில் தைராக்சின் எனும் ஹார்மோனைச் சுரப்பதற்கு அயோடின் சத்து மிக அவசியம்

அயோடின் குறைவினால் தைராய்டு சுரப்பி பெருத்து கழுத்துக்குக் கீழே வீக்கம் ஏற்படும். இதனை நாம் கண்டமாலை என்கிறோம். இந்நோயினை வராமல் தடுப்பது மிகமிக இலகுவானது. அயோடின் சத்தைப் பெறுவதும் எளிதானது - மலிவானது. ஒரு ரூபா செலவில் எமது உடலுக்கு ஒரு ஆண்டுக்குத் தேவையான அயோடின் சத்தினைப் பெற்றுக்கொள்ள முடியும். உணவில் சேர்த்துக் கொள்ளும் உப்பிலேயே அயோடினைச் சேர்த்து அயோடின் குறைவினைப் போக்க முடியும். எமது நாட்டில் அயோடின் சேர்ந்த உப்பை மருந்துக் கடைகளில் பெற்றுகொள்ள முடியும். இந்தியாவில் உப்பு தயாரிப்பாளர்கள் அயோடின் சத்தை உப்பில் சேர்க்க வேண்டுமென்பது சட்டமாக்கப்பட்டுள்ளது. நாமும் அதனைப் பின்பற்றலாம்.

உடலுக்குத் தேவையான 150 மைக்ரோ கிராம் அயோடினில் ஏறத்தாழ 90 வீதம் நாம் உண்ணும் உணவிலிருந்தே கிடைக்கின்றது. கடல் மீன், பச்சைக் காய்கறிகள், பால், பருப்பு, தானிய வகைகள் போன்றவற்றில் அயோடின் அதிகளவுக்கு உண்டு மிக அதிகமாக அயோடினைக் கொண்டது கடற்பாசி. எனவே கடல் பாசியை உண்டுவாழும் மீன்கள் அதிக அயோடின் சத்துள்ளவை. எஞ்சிய 10 வீத அயோடின் நாம் குடிக்கும் நீரினால் கிடைக்கின்றது. அயோடின் சத்து அதிகம் கிடைக்கும் பிரதேசங்களில் வாழ்கின்ற மக்கள் கல்வியறிவிலும் புத்திக் கூர்மையிலும் உயர்ந்து விளங்குவதும் அவதானிக்கப்பட்டுள்ளது.

— ராஜி




# விடியும் பொழுது நமக்கு

— ஊரெழு தர்சினி —

விழிகளால்......
நட்சத்திரங்களை

வருடுவதை விட்டு,
விண்ணேறுங்கள் — போய்
நட்சத்திரங்களைப் பிடுங்கி
முன் வாருங்கள்!

வாருங்கள் போய்
இமயமலை உச்சிக்கும்
எங்கள் சேலைகளை
உடுத்தி வருவோம்....!

வாருங்கள்
போய் அந்த,
முழு நிலவுக்கொரு தடவை
பொட்டு வைத்து வருவோம்!

''கின்னஸ்'' புத்தகத்தில்
இடங்கள் எமக்கு
இன்னும் இருக்கின்றன;
ஏங்குகின்றன அவை

இன்னும்
எங்கள் பெயர்
இல்லாமல்!
போங்கள்,
போய் உங்கள்
பெயர்களைப்
பொறித்து வாருங்கள்!
அப்போது தான்......
அதன் பெருமைகள்
இன்னும்
பிடிபடாமல் போகும்!

காணுவதெப்படி?
என்று,
கனவுகளை
நலம் விசாரிக்காதே;
கனவுகளை......
நனவாக்குவதெப்படி
என்று,
கண்டு பிடி!

கண்ணகி — சீதையின்
கற்புகளில்
சிறந்தது எதுவென
இன்னும்
கண்டு பிடிக்கவில்லை ....

கொண்டு போய்
கொம்பியூட்டரிடம் கொடுங்கள்
கண்டு பிடிக்கட்டும்.
முடியா விட்டால்......
அதுவும் கிடந்து
மூச்சு வாங்கட்டும்!

கண்ணகியும் — சீதையும்
அல்ல — எங்கள்
கண்டு பிடிப்புக்கள்....
''பெனுசீர் பூட்டோவும்
அன்னை திரேசாவும்''
எங்கள் புதுப்படிகள்.

நாளை......
உன் பெயரும்
என் பெயரும்
அறிகுறிகள்.

அடுப்படிகள்
அவசியம் தான்
அங்கேயே நீ
காணமல் போய் விடாதே!
அரிசி விலை — பருப்பு விலை
தேவை தான்
ஆனல்
அவையோடே
நீயும்
அவிந்து விடாதே!

அணுக்களையும்
அண்டங்களையும்
இன்னும்
கண்டு பிடிக்க வேண்டும்.
அங்கேயும்
உங்கள் உதவிகள்
தேவைப்படும்.
நீங்கள்
அடுப்பு அகதிகள் அல்ல

'' இன்டர் நஷனல் எவோர்
''டுகேள்''

# அரண்மனை தீப்பிடிக்கும்

**வவுனியா - திலீபன்**

நான்
நதி … …
நீந்துங்கள்
வெறி தீரும்வரை…!

*

நான்
அழகிய பூ.
முகருங்கள்.
சலித்ததன் பின்
பிய்த்து எறியுங்கள்!

*

நான்
ஜுவாலை விடும்
நெருப்பு.
சிகரெட்
பற்ற வையுங்கள்!

*

நான்
செழிப்பான பயிர்.
விளைந்ததன் பின்
இரக்கமில்லாமல்
அறுவடை செய்யுங்கள்!

*

என்னை
நீங்கள்
மிதித்தபோதுதான்
நான்
முளைத்தேன்.

*

இது
என்
இதயத்தின் பாடல்.

உங்கள்
உணர்வுகளை
உரசவில்லையா?

*

ஆதிக்க வெறிபிடித்த
ஆண்களே ……
பருவத்தால்
மலர்ந்தவள்
நான் ……
உங்களால்
கிள்ளப்படுகிறேன்!

*

வானத்தை
என்
வலது கையால்
வசப்படுத்தப் போகிறேன்.
இனியும் —
பெண்மை உணர்வுகளை
அந்தப்புரத்தில்
பூட்டி வைக்காதீர்கள்.
அரண்மனை
தீப்பிடித்துவிடும்!

---

# விழுங்கப்படும் கனவுகள்

கோரப் பசியெடுத்த
கனவுகள்!

விழுங்கித் தீர்த்தது
எத்தனை உள்ளங்களை?
உருக்குலைத்து வைத்தது
எத்தனை உருவங்களை?

வீடுகளின் உள்ளே
கடுந்தவம் புரியும்
கன்னிமா முனிவர்கள்
வேள்வித் தீயில்
தாமே வேகும்
தவப் பயன்!

வாசல் வரை வந்து
மீண்டு விடும்
மாப்பிள்ளை உருவங்களை
விழிகள் விழுங்கி
வழியனுப்பி வைக்க;

வான்வரை விரையும்
சிட்டுக்கள்
வானத்து உயரத்தில்
வட்டமிடும் சீதனப்பருந்தால்
விழுங்கப் படும்!

வேண்டாம் இனி இந்த
கனவுகள்!
வேண்டாம் இனி இந்த
வேள்வி!
வேண்டப் படுவது
வேற்றுத் திசை வழி!

— எஸ். பி. சிவனேஷ்

பகுதிநேர வேலை

# பெண்கள் வேலையில்லாப் பிரச்சினைக்கோர் தீர்வாகுமா?

சரோஜா சிவச்சந்திரன்

இன்று பெண்களை உற்பத்தி சார் துறைகளில் ஈடுபடுத்துவது தொடர்பாக அதிகளவிலான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பெண்களை உற்பத்திசார் துறைகளில் ஈடுபடுத்துவது என்பது கருத்தியல் ரீதியில் பல அம்சங்களை பின்னணியாக கொண்டமைகின்றது. வேலை என்ற பதம் - பெண்களைப் பொறுத்தவரை தெளிவானதோர் வரையறையைக் கொண்டு காணப்படவில்லை. இலங்கையில் பெண்கள் வகிக்கும் சமூக பங்கு, தொழில் பாகுபாடுகள் என்பன 'பெண்மை' யின் கட்டுக்கோப்புள் வரையறுக்கப்பட்ட கருத்தியல் சித்தாத்தங்களை கொண்டே ஆராயப்பட வேண்டியுள்ளது.

இலங்கையின் 25 மாவட்டங்களையும் பிரதேச அலகுகளாகக் கொண்டு பெண்கள் குடித்தொகை வீதாசாரத்தில் உற்பத்தித் துறைக்கு வழங்கும் பங்களிப்பு, அவர்கள் பார்க்கும் தொழிலோடு ஒப்பிடுகையில் மிகக் குறைந்த அளவினதாகவே உள்ளது. றுத் டிக்சன் முல்லர் என்பவரது 'மூன்றும் உலக விவசாயத்தில் பெண்கள் வேலை வாய்ப்பு' என்ற ஆய்வில் கூறுவது போல, பெண்கள் உற்பத்தி துறைக்கு, குறிப்பாக உணவு உற்பத்தி விவசாயம் சார் துறைக்கு வழங்கும் பங்களிப்பு அவர்களது குடும்பப் பொறுப்பு சார், பண்புகள் காரணமாக குறைவாகவே மதிப்பிடப்படுகின்றது, எமது நாட்டிலும், பெருந்தோட்டத்துறை தவிர்த்த ஏனைய துறைகளில் பொருளாதார உற்பத்தித்துறைக்கு பெண்களின் பங்களிப்பு குறைவானதாகவும் அதே நேரம், புள்ளி விபர மதிப்பீட்டில் மறைக்கப்பட்டதாகவும் உள்ளது. எமது நாட்டின் பல்வேறு உற்பத்தி சார் துறைகளிலும், ஒன்றிணைப்பு திட்டங்களிலும் 'பெண்கள்' என்ற வார்த்தையினை சேர்த்து விடுவதனால் மட்டும் பூரணமான இலக்கை அடைந்துவிட முடியாது. ஆண், பெண் இருபாலாரையும் உள்ளடக்கிய உள்ளார்ந்த சிந்தனைகள், அனுபவங்கள் என்பனவற்றை மனங்கொண்டு, பொதுவாக எல்லோரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் விரைவான சிந்தனை மாற்றங்கள் இன்று அவசியமாகும்.

பெண்நிலைவாதம் பற்றிய சித்தாந்தங்கள் முன்வைக்கும் இருவகை வரையறைகள் தனிநிலை பெண் நிலைவாதம் சார் நிலை பெண்நிலைவாதம் என்பவை. இவை எமது நாட்டின் பெண்களின் நிலைப்பாட்டினை வகுத்துக் கொள்வதற்கு உறுதுணையாக உள. தனிநிலை பெண் நிலைவாதம் பெண் தனது சுய நிலைப்பாடு அல்லது சுயதேவையினை ஓர் புத்திஜீவி என்ற அடிப்படையில் எவ்வித பால் வேறுபாடுமின்றி அணுகுவதாகும், சார் நிலைப் பெண் நிலைவாதம் பெண்களது அபிலாசைகளை கூடியளவு சார்பு படுத்துவதோடு, சமூகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட குடும்ப அமைப்பு தொடர்பானது. இதுவே இன்று எமது நாட்டில் சமூகத்தில் முக்கிய இடத்தினை வகிப்பதுமாகும். எமது நாட்டில் அபிவிருத்தி திட்டமிடல் என்பது பெரிதும் ஆண்களை மையமாகக் கொண்டு இயங்குவதால் பெண்கள் எப்பொழுதும் இரண்டாம் தர வருமானம் ஈட்டுபவர்களாகவே கணிக்கப்படுகின்றார்கள். எமது நாட்டுச் சூழல், கலாசார நியமங்களின் அடிப்படையில் எமக்குப் பொருத்தமான பெண்நிலைவாதம் படிமுறை குடும்ப அமைப்புள் அமைந்த சார்பு நிலை பெண்நிலை வாதமே. இதுவே எமது பெண்களின் வேலை நிலைமைகள் பற்றி ஆராய்வதற்கும் மிகப் பொருத்தமானதாக அமைகின்றது.

பெண்களது வாழ்க்கை முறைகள், வேலை நிலமைகள் என்பவற்றில் மாற்றத்தினை ஏற்படுத்துவதில் அறிவு, கல்வித் தகமைகள் முக்கிய பங்

கினை வகிக்கின்றன. கல்வி நிலைகளில் பெண்கள் அடையும் மேம்பாடு. பொருளாதார சமூக அமைப்புக்களில் அடிப்படை மாற்றங்களை ஏற்படுத்த உதவுவதோடு. பொருளாதார அபிவிருத்தியினையும் சமூக அமைப்பினையும் ஊக்கிவிக்கும் கருவியாகவும், தனிநபர் மேம்பாட்டிற்கும், கருத்து மாற்றங்களை ஏற்படுத்தவும் உதவும்.

இலங்கையில் பெண்கள் கல்வி நிலை, 1981ஆம் ஆண்டு புள்ளி விபரத்தின்படி 86.5 சதவீதமாகக் காணப்பட்டது. பிரதேச ரீதியில் இது வேறுபட்டதாக அமைகின்றது. இதில் யாழ்ப்பாணம் (91.7%) மிக உயர் கல்வி நிலை வகிக்கும் பகுதிகளுள் அடங்குகின்றது. மன்னர் (84.1%) முல்லைத்தீவு (83.3%) உயர் கல்விநிலை பகுதிகளோடும் வவுனியா (77.2%) மத்தியநிலையிலும், திருகோணமலை (72.2%) குறைந்த கல்வி நிலை பகுதியாகவும் மட்டக்களப்பு (59.4%) மிகக் குறைந்த கல்வி நிலை பகுதியாகவும் விளங்குகின்றது. இப்புள்ளி விபரங்கள் பெண்கள் கல்வி நிலை பற்றிய பிரதேச வேறுபாடுகளைத் தெளிவாகக் காட்டுகின்றன. இந்திய தமிழரது சராசரிக் கல்வி வீதம் 55.2 வீதமாகக் காணப்பட்டது.

இலங்கையில் கல்வி நிலையில் பெண்கள் உற்பத்தி சார் துறைகளில் ஈடுபடுவதற்குரிய தகைமைகளைப் பெற்றிருந்தும் பெரும்பாலானவர்கள் வீட்டு வேலைகளில் ஈடுபடுபவர்களாக இருப்பது பெண்கள் தொழிற் சக்தியில் பங்களிப்பு செலுத்துவதை குறைப்பதாக உள்ளது. ஆண்கள் ஈடுபடும் தொழில்கள் ஒவ்வொன்றிலும் ஈடுபடுத்துவதற்கு பெண்கள் நிரம்பல் (Supply) போதியளவாக இல்லை என்று பொதுவாக கூறப்படுகின்றது. இதற்கு கணிசமான அளவு பெண்கள் வீட்டு வேலைகளில் முடக்கப்பட்டிருப்பது காரணமாக காட்டப்படுகிறது பெண்கள் ஈடுபடும் வீட்டு வேலைகள் மட்டத்திலான பொருளாதார உற்பத்தி இங்கு கவனத்திற் கொள்ளப்படவில்லை என்பது தெளிவாகின்றது. இலங்கையில் நவீன சேவைத்துறையில், மொத்த தொழில் பார்க்கும் பெண்களில் 30 வீதமானவர்கள் ஈடுபட்டுள்ளனர். ஆசிரியர் தொழில், தாதித் தொழில், நிர்வாக தொழில் போன்றவை பொதுத்துறையில் முக்கியம் வகிக்கின்றன. தனியார் துறையில் வர்த்தகம். விடுதிகள் நடாத்துதல் போன்ற துறைகளில் வேலை பார்த்தல் முக்கியமானதாக கருதப்படுகிறது பொதுத்துறையில் இவர்களில் 1,10,000 பெண்கள் வேலையில் ஈடுபட்டுள்ளனர். இதில் யாழ்ப்பாணத்தில் 4.6 வீதமானவர்கள் அடங்குகின்றனர் கூட்டுத்தாபன துறையில் பெண் தொழிலாளர்கள் ஏறத்தாழ 25.000 பேர் உள்ளனர். எழுதுவினைஞர் வேலையைப் பொறுத்து அதிகமான பெண்கள் வேலையில் ஈடுபட்டுள்ளனர். இவை யாவும் நகரத்தைச் சார்ந்த பெண் தொழிலாளர்களுக்கே சாதகமாக அமைகின்றன. உணவு தயாரித்தல். ஆடை தயாரித்தல், சிறு வர்த்தகம். கைத்தறி. பன்னவேலை போன்ற துறைகளிலும் கணிசமான அளவு பெண்கள் ஈடுபட்டுள்ளனர்.

வேலை வாய்ப்பினைப் பொறுத்தவரை அதிக வருமானத்தை ஈட்டித் தரும் தொழில்களான இத் தொழில்களில் நகர் சார் தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர், குடித்தொகையில் 70 வீதத்திற்கு மேலான பங்கினை விவசாயக் கிராமியத்துறையே வகிக்கின்றது. பொருளாதார மேம்பாட்டிற்காக இவ் விவசாயத் துறையினையே நம்பியிருக்க வேண்டியுள்ளது. இந்நிலையில் பொருளாதார துறைகளில் ஈடுபட ஆர்வமிருந்தும் குடும்பப் பொறுப்புக்கள் காரணமாக, தமது திறமைகளை வெளிக்காட்ட முடியாத பல பெண்களுக்குப் பகுதி நேர அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்குவது பற்றி நாடுகள் ஆர்வம் காட்டி வருகின்றன. இதன் காரணமாக பெண்கள் மத்தியில் நிலவும் வேலை வாய்ப்பின்மையை போக்குவதுடன், தொழில் பார்க்கும் பெண்கள் எதிர்பார்க்கும் பல பிரச்சினைகளையும் தீர்க்கலாம் என்று கருதப்படுகின்றது,

பெண்கள் வெளியில் தொழில் பார்க்கச் செல்வதனால் பிள்ளைகள் தாயின் பராமரிப்பிலிருந்து விடுபடுவது பிள்ளைகளின் பிற்கால நிலமைகளில் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. ஆகவே பெண்களுக்குப் பகுதி நேர வேலைவாய்ப்பு வழங்குதல்

இவர்களின் வருமான நிலையினை உயர்த்துவதோடு பிள்ளைகளின் பராமரிப்பிலும் கவனம் செலுத்துவதற்கு வழிவகுப்பதாக கூறப்படுகின்றது. யப்பானில் பெண்கள் பகுதி நேர வேலைகளில் ஈடுபடுவது அதிகம். யப்பான் நாடு தந்தைவழி சமூக பாரம்பரியங்களை அடிப்படையாகக் கொண்டது. இங்கு பெண்களே பிள்ளைகளை வளர்த்தல் நோயாளிகள் முதியவரை கவனித்தல் போன்ற பணிகளைப் பார்க்கின்றனர். இதனால் பெண்களின் 20 — 35 வருட வயதுக் காலத்தில் யப்பான் நாட்டில் பெண்கள் தொழில் பார்க்கும் வீதம் அதாவது அவர்கள் திருமணமாகி பிள்ளைகளை பெற்று வாழும் வாழ்க்கைகாலமாகிய இவ்வயதெல்லையில் தொழில் பார்க்கச் செல்வது குறைவாக உள்ளது மத்திய வயதை அடைந்ததும் பெண்கள் பகுதி நேர வேலைகளில் ஈடுபடுவது அதிகரிக்கின்றது. 1983 ஆம் ஆண்டு மதிப்பீட்டின் படி பகுதி நேர வேலையில் ஈடுபட்ட பெண்கள் தொகை 3 மில்லியனுக்கும் அதிகமானதாக காணப்பட்டது. பெண்களைப் பகுதி நேர வேலைகளில் ஈடுபடுத்துவதனால் தொழிலாளர் செலவு குறைதல், தொழிலாளியின் முறை ஒழுங்குகளை சரிபார்த்தல், போதியளவு தொழிலாளர்கள் கிடைத்தல் போன்ற நன்மைகள் ஏற்படுவதாக தொழில் வழங்குநர் கூறுகின்றனர். ஆனால் பகுதி நேர பெண் தொழிலாளர்கள் பெறும் ஊதியம் மிகக் குறைவானதே.

பெண்கள் இவ்வாறு பகுதி நேர வேலைகளில் ஈடுபடுவதனால் தமது பூரணமான தொழில் அனுபவங்களையும் நன்மைகளையும் இழக்கின்றனர். வேலை நிலைமைகள், தொழிலில் எதிர்காலம் சட்டரீதியான உரிமைகள், தொழில் பாதுகாப்பு என்பன பூரணமாக கிடைப்பதில்லை. பெண்களுக்கு முழு நேர வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு அவர்கள் தொழில் சங்க அமைப்புள் ஒன்றுபடும் போது பெண்களுக்கு ஆண்களைவிட சலுகைகள் அளிக்கப்பட வேண்டும் எனவும் தொழில் வழங்குபவர்கள் தடுமாறுகின்றனர். பிரசவ லீவு, பிள்ளைப் பராமரிப்பு வசதிகள் வழங்குதல், பெண்களை இரவு நேரங்களில் வேலைக்கமர்த்த முடியாத நிலை, மேலதிக நேரம் வேலை செய்யப் பெண்கள் விரும்பாத நிலைமைகள் என்பனயாவும் கவனத்திற் கொள்ளப்படுகின்றன.

வேலை வாய்ப்பு அளிக்கப்படுதல் என்ற ரீதியில் ஆண் பெண் இருபாலாருக்கும் சம சந்தர்ப்பம் வழங்கப்படுதல் வேண்டும். இவ்வாறான சம சந்தர்ப்பம் வழங்கப்படாமையினாலேயே பெண்கள் பகுதி நேர வேலை வாய்ப்புகளுக்கு தள்ளப்படும் நிலை உருவாகின்றது. பகுதி நேர வேலை வழங்குதல் மீண்டும் தொழில் ரீதியில் ஆண் பெண் பாகுபாட்டினை எடுத்துக் காட்டுவதோடு பெண்கள் வீட்டு வேலைகள் பிள்ளைபராமரித்தல் என்ற பொறுப்புக்களை தொடரவே வழி செய்யும் □

## யப்பான்

யப்பானில் 16.15 மில்லியன் பெண்கள் தொழில் பார்க்கின்றனர். இவர்கள் மொத்த தொழிலாளர்களில் 36.5 வீத மானவர்களாகும். கைத்தொழிற்துறையில் 25.1 வீதமானவர்கள் அதாவது 4.24 மில்லியன் பெண்கள் உற்பத்தித் துறையில் தொழில் பார்ப்பவர்களாக உள்ளனர். பெண்கள் தொழிற் சக்தியில் இன்று விவாகமான பெண்கள் 58.8 வீதத்தினர் அடங்குகின்றனர். விவாகமான பெண்களில் அதிகமானோர் தொழிற்துறையில் ஈடுபாடு காட்டுவதனை இப்புள்ளி விபரம் காட்டுகின்றது. பெண்கள் கூடுதலாக தொழிற்துறைகளில் ஈடுபட்ட போதிலும் தொழிற்சங்க அமைப்புள் ஈடுபடுவது ஆண்களைவிட குறைவாகவே உள்ளது. இதற்கு முக்கிய காரணம் பெண்களின் இருமைத் தன்மையான சுமைகளே.

Womens' Forum

# மனித உறவுகளில் பெண்களின் நிலை

திரு. சசிகாந்தன்

"எனக்கு வேலைக்குப் போக விருப்பம் தான் ஆனல் , அண்ணு தான் வேண்டாம் என்று சொல்கிருர் அதை மீறி வந்தால் குடும்பத் துக்குள்ளே வீண் பிரச்சினை''

''இப்ப நான் படித்த படிப்புக்கு நல்ல வேலை கிடைக்கும் தான். ஆனல் அவருக்கு நான் வேலைக்குப் போவது பிடிக்கவில்லை நான் என்ன செய்ய''

''எனக்கு சீதனம் வேண்ட விருப்பமில்லை. அந்த நோக்கிலே நான் காதலிக்கவில்லை. ஆனல் அம்மா தான் கேட்கிரு. நான் என்னென்று அவவின் பேச்சை மீறுவது ?''

''வீட்டிலே எப்பவும் மாமியார் மருமகள் சண்டைதான். நான் ஆர் பக்கம் கதைக்க மனைவி பக்கமா ? அம்மா பக்கமா ? அதாலே நான் எப்பொழுதும் சண்டை தொடங்க வெளியிலே போய் விடுகிறேன்''

இப்படிப்பட்ட கதைகளை நாம் அடிக்கடி கேட்டு வருகின்ருேம். இவற்றுக்குக் காரணம் என்ன ? இதற்கு தீர்வு என்ன ? என்பது எமது மனதில் அடிக்கடி எழும் கேள்வியாகும். இதற்கு விடை தேடும்போது நாம் உண்மையான அடிப்படையான காரணங்களை புரிந்து கொள்கி ருேம்.

நாம் மனித உறவுகளையும் அதன் அடிப்படையான உளவியல் காரணிகளையும் எமது உணர்ச்சிகளையும் புரிந்து கொள்ளாமையே இதற்குக் காரணம். மனித உறவுகளை நாம் சரியானபடி புரிந்து கொள் வதனல் நாம் எமது உறவுகளை சரியான முறையில் பேணமுடியும்.

## மனித உறவுகளின் தேவை என்ன?

மனிதன் தனியாக உலகில் பிறந்தாலும் அவன் வாழும் சூழ லானது அவனுக்கு தாக்கங்களை ஏற்படுத்துகிறது. அவற்றினூடாக அவன் வளர்வதற்கு பல்வேறு தகவல்களையும் அறிவையும் பெற்றுக் கொள்ள அவன் பலருடனும் தொடர்பு கொள்ள வேண்டி ஏற்படுகி றது. இதன் விளைவாக அவனுக்குப் பல உறவுகள் ஏற்படுகின்றன.

மனிதன் பிறப்பினுலும் அதன் பின்னுலும் பலவித உறவுகளை பெறுகிருன். இது அவனது வாழ்க்கையை சிறந்த முறையில் நடத்திச் செல்ல உதவுகின்றது.

## மனித உறவுகளின் அடிப்படை என்ன?

மனித உறவின் அடிப்படை அன்பேயாகும்; எவரைக் கேட்டா லும் கிடைக்கும் பதில் இது.

அன்பென்ருல் என்ன?

இதற்கு பலருக்கு விடை சரியாக தெரியாது. இங்கே தான் பிரச்சினை எழுகின்றது.

அன்பென்பது ஒருவரை ஒருவர் நன்றாக புரிந்து தெரிந்து எடுக்கும் முடிவு. இதற்கு அடிப்படையாக இருப்பது பாசம், பச்சாதாபம், கருணை, இரக்கம், ஆசை, கனிவு போன்ற உணர்ச்சிகள்.

## மனித உறவுகளின் ஆரம்பம் என்ன?

மனித உறவுகளின் ஆரம்பம் உணர்ச்சிகள். இவற்றை சரியாகப் புரிந்து கொள்ளாமல் பிழையாக எண்ணி மறுத்து அடக்கி கொள்கின்றோம். இதனால் உறவுகள் பிழையாக போய் பிரச்சினைகள் தோன்றுகின்றன.

ஒன்றாகப் பழகி பாசம் என்ற உணர்ச்சியை காதல் எனக் கருதி மணம் புரிந்து பிரச்சினைப்படுவதும்:

அம்மா மீதுள்ள கோபத்தை ஏற்காது பாசமெனக் கருதி இறுதியில் ஒரு நாள் அது வெடித்து குடும்பத்தில் பிரிவு ஏற்படுவதும்

இப்படி பல நிகழ்ச்சிகள் சரியான முறையில் உணர்ச்சிகளை புரிந்து தெரிந்து ஏற்றுக் கொள்ளாததனால் ஏற்படும் பிரச்சினைகள்.

நாம் எமது உணர்ச்சிகளை அடையாளம் கண்டு கொள்ள வேண்டும். அதனை சரியானபடி பெயரிட்டு இன்னார்மீது எனக்கு இன்ன உணர்ச்சி என ஏற்றுக் கொள்ள வேண்டும். பின்னர் அதனை ஆராய்ந்து இனங்கண்டு சரியான முறையில் வெளிக் கொண்டுவர வேண்டும். உணர்ச்சிகளை சரியாக புரிந்து கொள்வதனால் ஆரம்பமாகும் உறவுகளும் சரியாக அமைய முடியும்.

## மனித உறவுகளின் வளர்ச்சியின் அடிப்படை என்ன?

உறவுகள் உணர்ச்சியில் ஆரம்பித்தாலும் அது வளர்வது உணர்ச்சியின் வசப்பட்ட செயலால் அல்ல. உணர்ச்சியின் உந்தலினால் ஏற்படும் உரையாடல் கருத்துப் பரிமாற்றம் போன்றவற்றினால் ஏற்படும் தொடர்பு கொள்ளலினால் தான்,

இந்தத் தொடர்பு கொள்ளல் என்பது மூன்று மட்டங்களில் ஏற்படலாம்.

1) வெய்ச்சு வெய் தொடர்பு:- இது ஆரம்ப தொடர்பாகும். அதாவது வெறுமனே பொதுவிடயங்களையும் ஆழமற்ற விடயங்களைச் சந்திக்கும்போது மட்டும் பரிமாறிக் கொள்வது.

2) தலைக்கு தலை தொடர்பு:- அடிக்கடி சந்தித்து தன்னுடையதும் மற்றயவர்களுடையதுமான கருத்துக்களை பரிமாறிக் கொளவது இது ஓரளவு ஆழமான தொடர்பு.

3) இதயத்துக்கு இதயமான தொடர்பு:- இது காத்திருந்து சந்தித்து தன்னுடையதும் மற்றயவருடையதுமான உணர்ச்சிகளை பரிமாறிக் கொள்வது இது மிக ஆழமான தொடர்பு.

தொடர்புகள் படிப்படியாக சரியான முறையில் வளர்ந்து சரியானமட்டம் வரை வளருமானால் அதனால் வளர்க்கப்படும் உறவுகளும் சரியாக அமைய முடியும்.

## மனித உறவுகளின் மட்டங்கள்

அன்பை அடித்தளமாக கொண்டு உணர்ச்சிகளால் ஆரம்பிக்கப்பட்டு தொடர்புகளினால் உருப்பெறும் உறவுகள் தொடர்பின் ஆழத்தினை பொறுத்து பல்வேறு மட்டங்களில் அமைகின்றன. உறவுகளின் மட்டங்களை நாம் அடையாளம் கண்டு கொள்வது அத்துடன் சம்பந்தப்படும் நிகழ்வுகளை (dynamics) புரிந்து கொள்ள உதவும்.

மிகவும் ஆழமான இதயத்துக்கு இதயம் என்னும் தொடர்பின் மூலம் உருவாகும் உறவு மிக ஆழமானது. இது பொதுவாக கணவன் - மனைவி, காதலன் - காதலி ஆத்ம நண்பர்கள் போன்றோரிடையே காணப்படும். இதற்கு அடுத்த படியாகவே அடுத்த உறவுகள் காணப்படலாம்.

மேற்கூறிய உறவுகளைத் தொடர்ந்து பிள்ளை, தாய், சகோதரர்கள், உறவினர், சமூகம், உலகம் போன்ற உறவுகள் அவ்வவற்றின் தொடர்பின் ஆழத்தை பொறுத்த அளவில் அமைகின்றன.

## உறவுகளும் பிரச்சினைகளும்

உறவுகளில் ஏற்படும் பிரச்சினைகள் உறவுகள்கட்டி எழுப்பப்படும் முறையில் உண்டாகும் தவறுகளின் அடிப்படையில் எழுகின்றன.

உறவின் அடித்தளமான அன்பு சரியாக அமையாமல் ஆட்டம் காணும் உறவுகள் பல. அன்பு என்பதை பிழையாக புரிந்து கொண்டு உருவாகும் உறவுகள் பிற்காலத்தில் ஆட்டம் காணலாம். அன்பு என்பது சுதந்திரமாக இருக்கவேண்டும். "நீ ஒன்றை அன்பு செய்தால் நீ அதனை அதன் பாதையில் செல்லவிடு அது உன்னிடம் திரும்பி வருமாயின் அது உனதே. அது திரும்பி வராவிடில் அது உன்னுடையதல்ல", "நீ ஒருவரை அன்பு செய்தால் அவருக்கு உன்னை வெறுக்கும் உரிமையையும் கொடு". ஒருவரை ஒருவர் அப்படியே புரிந்து அவரை அவராகவே ஏற்றுக்கொள்ளல் அன்பாகும் இதனை விடுத்து தங்கியிருத்தல் (Dependency) எதிர்பார்த்தல் (Expectation) மறைமுகமாக கட்டாயப்படுத்தல், தவறாக புரிந்து கொள்ளல், மதிப்பிடல் (Judging) மாற்ற விரும்புதல், உணர்ச்சிகளை தவறாக புரிந்து கொள்ளல், உணர்ச்சிவசப்படல் போன்றவற்றை அடிப்படையாக அன்பென கொண்டு உறவுகளை அமைத்தால் அது சீரானதாக அமைய முடியாது.

அடுத்தபடியாக உணர்வுகளை தவறாக புரிந்து கொண்டு உருவாகும் உறவுகளும் சிக்கல் உடையனவாக அமைகின்றன. உணர்ச்சிகள் நல்லவையோ கெட்டவையோ அல்ல. அவை இயல்பானவை அவை மதிப்பீட்டுக்கு அப்பாற்பட்டவை, பசி, தாகம் போன்றே உணர்ச்சிகளும் அவற்றை நாம் புரிந்து தெரிந்து கொள்ள வேண்டுமே அன்றி அவற்றை மதிப்பிடவோ தீர்ப்பிடவோ கூடாது. ஆனால் உணர்ச்சியின் வசப்பட்டு நாம் செயல் புரிந்தால் அச்செயல்கள் நன்மை தீமை என்னும் பல்வகை மதிப்பீட்டுக்கு உட்பட்டவையே. எமது உணர்ச்சிகளை சரியான முறையில் அறிந்து ஏற்றுக்கொள்வதன் மூலம் அவற்றை சரியான முறையில் வெளிக் கொண்டுவரலாம். இதன் தொடர்ச்சியாக வரும் உறவுகளும் சரியான முறையில் அமையும்.

அடுத்ததாக தொடர்பு கொள்ளலில் ஏற்படும் பிரச்சினைகள். நாம் எம்மைப்பற்றி சரியான முறையான தொடர்பு கொள்ளல் மூலம் மற்றயவர்களுக்கு தெரியப்படுத்தாமல் "அவருக்கு விளங்கியிருக்க வேண்டும்", அவருக்கு என்னைப் பற்றி தெரிந்திருக்கும் தானே" "இவ்வளவு தூரம் என்னோடு பழகியும் என்னை புரியவில்லையா?" என மற்றயவர்களை குறை கூறுவதும் மற்றயவர்களை அவர்களது நடவடிக்கையை அடிப்படையாக கொண்டு "அவர் என்னை விரும்புகிறார்" "அவர் என்னை வெறுக்கிறார்" எனக்கு அவரை பிடிக்கவில்லை என்று தெரிந்தும் ஏன் இப்படி நடக்கிறார் என மதிப்பிடுவதும் தவறாகும். உங்களது எண்ணங்களையும் எதிர்பார்ப்புக்களையும் மதிப்பீடுகளையும் தெளிவான முறையில் தெரிவித்து அவற்றை சரிபார்த்துக் கொள்ள வேண்டும் அப்படி தெரிவிக்காமல் ஒருதலைப் பட்சமாக எதுவித தொடர்பு கொள்ளலுமின்றி அமையும் உறவுகள் சரியாக அமையமாட்டாது.

உறவுகளின் மட்டங்களை சரியாக நி[illegible] நிறுத்தாவிடில் மேலும் பல பிரச்சினைகள் ஏற்படும். ஆழமான உறவுகள் ஏற்பட வேண்டிய இடத்தில் மேலோட்டமாகவும் மேலோட்டமாக ஏற்பட வேண்டிய இடத்தில் ஆழமாகவும் உறவுகளை அமைத்து விட்டு அல்லல்படுவர்கள் ஏராளம். உதாரணமாக ஒருவர் தனது தாயிலும் பார்க்க அதிகமாக தனது மனைவியிடம் ஆழமான உறவை கொண்டிருக்க வேண்டும் இதனை மற்றவர்களும் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஒருமனைவி தனது கணவனுடன் ஆழமான உறவை ஏம்படுத்தாது அவர் தாய் மேல் அளவுக்கதிகமாக பாசம் வைத்திருப்பதாக கூறுவதும் ஒரு தாய் தன் மகன் மேல் ஆழமான உறவினை அமைத்துவிட்டு [illegible] அவன் மனைவி தன்னிடமிருந்து பிரிப்பதாக ஆத்திரப்படுவதும் தவறாகும். எனவே ஒவ்வொருவருடனும் சரியான நிலையில் உறவினை அமைத்துக் கொள்ள சரியான முறையில் தீர்மானிக்க வேண்டும்.

(40 ஆம் பக்கம் பார்க்க)

# அஸ்தமனத்தில் ஒரு விடியல்

**ஊரெழு தர்ஷினி**

டக் ... ... டக் ...... டக் பலமாக கதவு தட்டப்படும் சத்தம்

நல்ல தூக்கத்தில் இருந்த சாரதா தான் முதலில் திடுக்கிட்டு கண் விழித்தாள். பிறகுதான் அவளின் தாய் ருக்மணியும், சகோதரி மல்லிகாவும் கண்விழித்த தனர். தொடர்ந்தும் கதவு பலமாகத் தட்டப்படுகின்றது.......

"இந்த நேரத்தில் யாராக இருக்கும் ... அதுவும் எம்மைத்தேடி இந்த அகாலத்தில்... யார் வரக்கூடும்? யார் ?''

சாரதா இப்படி நினைத்துக் கொண்டிருக்கும் நினைவினூடே... ஒரு பொறி பறந்தது.

''ஒரு வேளை ...ஒருவேளை ... திருடர்களா? களவெடுக்க" குப்பென்று அவளுக்கு வேர்த்துக் கொட்டியது.

மூர்க்கத்தனமான தட்டுதலினால் உலுத்துப்போன கதவு கீரிச்சிட்டது. அம்மாவும், சகோதரியும் பயத்தினால் உறைந்து போனார்கள். சாரதாவுக்கு உதடுகள் வரண்டு — தொண்டைக் குழிக்குள் என்னவோ அடைத்தது.

வீடுபூரா இருட்டாக இருந்தது. எழுந்துபோய் விளக்கைத் தீண்டவோ ... சக்தியற்று உடம்பு லேசாகிக் ... காற்றில் மிதப்பதுபோல் இருந்தது.

மிகவும் பழசாகிப் போன கதவு பலமான ஒரு உதைக்கு உடனே காலமானது.

அந்த இருட்டின் மங்கிய பசபசப்பில் சில கரிய உருவங்கள் நிழலாக உள்ளே வந்தன.

''வீல்'' என அலற வாய் எடுத்த சாரதாவின் வாயை முரட்டுத்தனமான கரம் ஒன்று பொத்தியது. இரண்டு பேர் தாயையும் சகோதரியையும் அழுத்திப் பிடித்திழுக்க ...... சாரதாவுக்கு இருட்டிக் கொண்டுவந்தது. அவளால் நிலைமையைப் புரிந்து கொள்ள முடிந்தது.

''ஓ ... இவர்கள் திருடர்கள் ... களவெடுக்க வந்திரிக்கினம் ... இப்ப எல்லா இடமும் பரவலா கொள்ளையடிக்கும்... கொள்ளைக்காரக் கும்பல் ... இப்ப ... இங்க வந்திட்டினம் ... கடவுளே இப்ப என்ன செய்யிறது? ஆம்பிளையாலே ஒண்டும் செய்ய ஏலாத இவங்களை எங்களால என்ன செய்ய முடியும்?''

''ஏய் ! இஞ்சபார் ... யாரும் கத்தினியள் எண்டால் சுட்டுத்தள்ளிப் போடுவம் .. மரியாதையா ...நாங்கள் சொல்றபடி நடக்க வேணும் ... தெரிஞ்சுதே?''

வந்தவர்களில் தலைவன் போல் இருந்தவன் — கடூரமாகக் கத்தினான். மூன்று பேரின் கைகளையும் பின்னால் கட்டி ..., அங்கிருந்த கதிரைக்குள் தள்ளினான் அவன்.

''கத்தி சத்தம்போட்டு ஊரைக் கூப்பிட்டியள் எண்டால் இஞ்ச பாருங்கோ துவக்கு... இப்படியே மூண்டு பேரும் கைலாயம் போய் விடுவியள் கவனம் பேசாமல் வாயை மூடிக் கொண்டிருக்க வேணும் தெரிஞ்சுதே?''

மீண்டும் அவன் எச்சரித்தான்.

சாரதாவுக்கு உலகமே ஆடத்தொடங்கியது. அவ

ளுக்குள் எதுவுமே வேலை செய்யவில்லை...

என்ன இது இது கனவா இல்லாட்டி உண்மையா? இது நிஷமில்லையே ... கனவு தானே ... இல்லை ... இது நிஷம் ... கனவில்லை ... உண்மையா நடக்கிறது...

அவளால் உண்மையை எதிர்கொள்ள முடியாமல் ... குழம்பிக் கொண்டிருந்தாள். பேச்சே வராத இடத்தில் ... கண்ணீர் மட்டும் முட்டி வழிந்துகொண்டிருந்தது.

அக்கா மல்லிகா உறைந்து போயிருந்தாள்.

இந்த உறைவு அவளுக்கு ஒன்றும் புதிதல்ல வழக்க மானதொன்று. எடுத்ததற் கெல்லாம் உறைந்துபோய் ...... இந்த உறைவே அவள் உருவமாகிவிட்டிருந்தது. கண்கள் எதையோ வெறிக்க அவள் உதடுகளை அழுத்திக் கொண்டிருந்தாள். அம்மா தான் பாவம். என்னவோ சொல்லத் துடிக்க ... முடி யாமல் ... ... வார்த்தைகள் குளறல்களாக சிதைந்து கொண்டிருந்தன.

''ஐயோ ... ராசாமார் உங்கட காலில விழுறன் எங்களை விட்டுவிடுங்கோ மோனை ... நாங்கள் ஏழை யள் எங்களிட்ட ஒண்டு மில்ல ... பணக்கார வீடுக ளாய் பார்த்துப் போங்கோ வன்...''

அம்மா இப்படி கதறிக் கொண்டிருக்க சாரதாவின் பயமும், நடுக்கமும் மெது வாக குறையத் தொடங்கி விட்டன. ''என்னதான் நடக் கும் பார்ப்போம்' என்ற சின்னத் தைரியம் மெல்ல மெல்ல எட்டிப்பார்த்தது

வந்தவர்கள் ஆளுக்கொரு வராக வீட்டைப் புரட்டி எடுக்கத் தொடங்கினர்கள்...

ஒருவன் விளக்கைத்தூண் டிவிட்ட வெளிச்சத்தில் அவ ளால் அனைவரையும் பார்க்க முடிந்தது. கண்கள் மட்டும் தெரிய முகத்தைக் கறுப் புத்துணியால் மூடியிருந்த னர். பார்ப்பதற்கு எல்லோ ரும் வயதில் மிகக் குறைந் தவர்களாக இருந்தனர்.

''இளைஞர்களே ... ஏன் இப்படி அநியாயமாக சீர ழிந்து போகின்றீர்கள். .... நீங்கள் நல்லபடி வாழ்ந்து முடிக்க உங்களிடம் என்ன இல்லை ...?''

பதட்டமான நிலையிலும் சாரதா அவர்கள் மீது அனுதாபப்பட்டு நினைத்தாள்.

வீட்டிலுள்ள அனைத்தை யும் அவர்கள் புரட்டிப் பார்த்து தேடிக்கொண்டிருந் தனர். எவ்வித ஆடம்பரங்க ளும் அவர்கள் வீட்டில் இல்லை ஒன்றிரண்டு கதிரை மேசைகளும் - உடைந்து போன கதவில்லாத அலுமா ரியும் இதர சிறு பொருட் களையும் தவிர கொள்ளைய டிக்கக்கூடிய விதத்தில் அங் கெதுவும் இல்லை ஆனல் இருந்தவையும் இவர்களின் ஆக்கிரோசங்களுக்குப் பலி யாகிக் கொண்டிருந்தன.

அப்போது தான் சாரதா வின் இதயம் பலமாக அடிக் கத்தொடங்கியது. இனி நடக்கப்போகும் செயலை நினைக்க அவளுக்கு உதறல் எடுத்தது.

அவள் நினைத்துக்கொண் டிருக்க அது நடந்து விட் டது.

மிகவும் பாதுகாப்பென்று நினைத்து, பழந்துணிகளுக் கிடையில் மறைத்துவைத்தி ருந்த நகையும் - சிறுதொ கைப்பணமும் அவர்களின் கையில் அகப்பட்டுப்போ கின்றது.

சாரதாவின் இதயம் துடிப் புகளை ஒரு கணம் நிறுத்தி விடுகின்றது. பேச்சே வர வில்லை; எரிமலையும், பூகம் பமும் ஒன்றாக அவளுக்குள் வெடித்துச் சிதறியது,

அந்தக் கொள்ளையர்க ளுக்கு ஒரே கொண்டாட் டம்.

''சரி நாங்களிப்ப உங் களை ஒண்டும் செய்யமாட் டம்... ஆனல் இப்ப நாங் கள் போகப்போறதில்லை ... இன்னும் கொஞ்ச மணித்தி யாலம் இருப்பம் ... தேத் தண்ணி வேணும் வைச்சுத் தாறியளோ ...?'' ... என்ற வன்;

...''வேண்டாம் நாங்களே வைக்கிறம் ... டேய் போடா போய் அடுப்பமூட்டி தண்ணி வை?''

என்று, ஒருத்தனுக்கு சொல்லி முடித்தான்.

எடுத்த நகைகளையும், பணத்தையும் சிறு துணிக் குள் முட்டையாகக் கட்டி தன்னுடன் வைத்துக் கொண்டு, அவர்களின்முன் உட்கார்ந்த அவன், ஆறுத லாக ஒரு சிகரெட்டையெ டுத்துப் பற்றவைத்தான்.

நெருப்பு சுவாலையால் அவன் கண்கள் பயங்கர மாக -சிவந்து மின்னியது.

நிமிடங்கள் வேகமாகக் கழிந்துகொண்டிருந்தன. இனியென்ன செய்வது என்ற பிரமிப்பில் சாரதா அசந்துபோனாள். திடீரென அவளுக்குள் என்னவோ-உறுதியாக எழுந்துநின்றது. சாகப்போகின்றவன் கடைசி முயற்சியையும் கடைப்பி டித்து பார்ப்பது போல்... அவளும் சின்னதாய் வெளி வந்த தைரியத்துடன் பேசத் தொடங்கினாள்.

வார்த்தைகள் நடுங்கினு லும் ... ஒவ்வொன்ருய் ... வெளிவந்தன. உலர்ந்த உத டுகளை ஈரப்படுத்திக்கொண் டாள்.

...''தம்பி ... வந்து ... என்ன உங்களுக்கு இரக்க மேயில்லையே ?'' அவளை, நிமிர்ந்து பார்த்தான் அவன். அவனுக்கிவை சலித்துப் போனவார்த்தைகள் ... எத் தனை முறை கேட்டாகிவிட் டது. அவன் தனது முகத் துணியை விலக்கி மெலி தாக சிரித்தான்.

அந்தச் சிரிப்பில் கேலி தான் மிதந்தது.

"இல்லை"

ஒரே வார்த்தை.

சாரதாவுக்கு பிறகு என்ன கதைப்பது என்று தெரிய வில்லை. மீண்டும் சில மௌன நிமிடங்கள் கரைந் தன.

''இஞ்ச .... நீங்கள் இப் படி களவெடுக்கிறது — குற் றம், பிழை எண்டு நான் சொல்ல வரேல்ல ...... ஆனல் இப்படி ஏழையளின்ட வயித்தில் அடிக்கிறது உங்க ளுக்கே நல்லா இருக்கே...? இது பாவம், அநியாயம்!''

வரப்புக் கட்டினுற் போல் வந்து விழுந்த வார்த்தைகளை காதில் போட்டுக் கொள்ளா தவன் போல் சிகரெட் புகை யினை வளையங்களாக ஊதியபடி அவன் அறையை விட்டு வெளியேறினன்.

... ஆனல்... நாளைக்கு இங்க இரண்டு செத்த வீடு செய்ய வேணும். செத்த வீட்டுச் செலவுக் கெண்டாலும் கொஞ்ச காசை வைச்சுப் போட்டு போறியளே ?''

முகத்தில் கருமையாக ஒரு திரை படர, அவன் நெற்றி யைச் சுருக்கி அவளை நோக் கினன்; என்ன என்பது போல் ... அவன் பார்வை எதிர் பார்ப்புடன் இருந்தது.



சாரதாவுக்கு 'திக்' கென் றது மனம்,

இவன் இடத்தை விட்டுப் போருன் ஒரு வேளை ... இப்பவே வீட்டை விட்டுப் போகப் போருனே ... போனல் ... கடவுளே ......

''தம்பி ஒரு நிமிஷம்'' ..

போனவன் நின்று திரும்பி பார்த்தான்.

"எல்லாத்தையும் எடுத்துப் போட்டியள்... பரவாயில்லை

சாரதாவுக்கு துக்கத்தில் தொண்டை அடைக்க — அழுகை ... சில நேரம் திண றலைக் கொடுத்தது. அவள் தொடர்ந்தாள். அந்த வார்த் தையில் நிதானமும்... தைரி யமும் ... குமுறலும் நிறை யவே இருந்தன.

''இஞ்ச ... தம்பி, முப்பத் தாறு வயசாகியும் கலியா ணம் வராமல் இருந்த அக்கா வுக்கு வாற கிழமை கலியா ணம். இரண்டாம் தாரமாத்

தான். ஆனுல் ... ஐம்பதிருயிரம் காசும் ... நகையும் சீதனமாக கொடுக்க வேணும் .. அதைத் தான் நீங்கள் எடுத்துப் போட்டியள்.. சரி பரவாயில்லை ''

நிறுத்தி விட்டுத் தொடர்ந்தாள்

''இவ்வளவு காலமும் கலியாணம் பேசிப் பேசி சீதனம் இல்லாததால் அக்காவுக்கு ஒண்டும் சரிவரேல்ல .. இனிக் கலியாணமே இல்லை எண்டிருக்க மனம் வந்து இரண்டாம் தாரமா எண்டாலும் கலியாணம் செய்ய ஒருத்தர் சம்மதிச்சிட்டார் ... நாங்கள் சரியா கஷ்டப்பட்டனுங்கள் வெளி நாட்டுக்கு போய் உழைச்சு சீதனம் சேக்கவோ இல்லாட்டி ... சீதனம் வாங்கி கொடுக்கவோ இஞ்ச ஆம்பிளையள் இல்லை. எனக்கு இப்ப முப்பத்தி நாலு வயது. இருபது வயதில இருந்து எவ்வளவோ கஷ்டப்பட்டு — உழைச்சு, மிச்சம் பிடுச்சு சேர்த்த சீதனம் தான் உது. உவ்வளவுதான் என்னுல சேர்க்க முடிஞ்சுது ... வாறவை எல்லாம் கேட்கிற சீதனத்தை என்னுல ஒரு வருஷத்தில சேர்க்க முடியவில்ல ''

சாரதா சொல்லிக் கொண்டிருக்க அவன் முகத்தில் சிந்தனை திரை போட்டது... மீண்டும் வந்து கதிரையில் இருந்தான்.

'சரி நீங்கள் எடுத்ததைக் கொண்டு போங்கோ .. ஆனுல் அம்மாவும் அக்காவும் சாகிறதை என்னுல இனித் தடுக்க ஏலாது பதினுறு வருஷமா உழைச்சதை இன்னும் ஒரு பதினுறுவருஷம் என்னுல உழைக்க ஏலாது. முடிஞ்சாலும் அப்ப அக்காவின்ர அந்த ஐம்பது வயசுக்கு கேட்கிற சீதனத்தை நான் உழைக்க ஏலாது. அந்த வயசுக்கும் மனமிரங்கி வாழ்வு கொடுக்க நினைக்கிற ஒரு அறுபது வயசுக்காரன் கேட்கிற சீதனத் தொகையை நான் உழைக்க முடியாது''

அவள் சொல்லிக் கொண்டிருக்க ... அவனுக்குள் பல இரசாயன மாற்றங்கள் நிகழத் தொடங்கின,

சாரதாவுக்கு எல்லாம் கொட்டித் தீர்க்க வேண்டும் என்ற ஆவேசம் ... அந்த வேகத்தில் .....

''தம்பி - பாரும் நல்லாகளவெடுங்கோ... வேண்டாம்... இதுபாவம் ..கூடாதுஎண்டு வியாக்கியானம் கதைச்சு - புத்தி சொல்ல மாட்டன். அது உங்கட சுதந்திரம். ஆனுல்...பணக் கொழுப்பில திமிர் விட்டுத் திரியிறவையளின்ட வீட்டில போய் அடியுங்கோ. எங்களப் போல அநியாயப் பட்டதுகளின்ட பாவத்தை சம்பாதிக்காதேங்கோ''...

களவெடுக்கிற நிலையும் ஒரு முறை வேணும்... யாரிட்ட எடுக்க வேணும் எண்ட விவஸ்தையே இல்லையே உங்களுக்கு ''

அவள் கோபமாக கத்திஞள்.

ஆனுல் அவனுக்கு ஏனே கோபம் வரவில்லை.

''எங்கட வீட்டைப் பார்த்தாலே எங்கட தரித்திர நிலை விளங்கியிருக்கும் இந்த நிலையில் இருக்கிற எங்களை கொள்ளையடிக்க உங்களுக்கு எப்படி மனம் வந்தது?''

அவன் தலை குனிந்தான்.

சோகத்தின் எல்லை தெளிவும்; துன்பத்தின் முடிவு துணிவும் வேதனையின் எல்லை... அமைதியையும் தர அவளுக்குள் உடைந்து போன நம்பிக்கை மெல்ல ஒன்று சேர்ந்தது.

''இவ்வளவு காசு கொடுத்து இரண்டாம் தாரமா கலியாணம் தேவையா எண்டு கேட்கலாம். பாரும்... எனக்குக் கலியாணம் தேவையில்லை தேவை என்டால் அதுவுக்கு வழியில்ல. அக்காவின்ட சீதனத்தைச் சேர்த்துக் களைச்சுப் போனன். இனி எனக்கு சீதனம் சேர்த்து. பிறகு ஒரு கிழட்டுக் கலியாணம் ஐம்பது வயதில சில நேரம் மூண்டாம் தாரமா அதோட நல்ல சீதனத்தோட...ஐயோ வேண்டாம்...''

கோபம் இழையோட ஒரு சிரிப்பு உதடுகளில் சிதறியது. அந்த சிரிப்பு அவனுக்கு குத்தியிருக்கவேணும். அதன் வேதனை அவன் முகத்தில் தெரிந்தது. அவன் சிறிது சிறிதாக உடையத் தொடங்கினுன்.

''எனக் கெண்டு ஒரு வேலையிருக்கு .. ஆனுல் அக்கா பாவம் அவாவின்ர நிலைக்கு கலியாணம் கட்டா

யம் தேவை. அதோட ஒரு பெட்டைக் கெண்டாலும் கலியாணம் முடிச்சுது என்ட நிம்மதியில் அம்மாவும் செத்துப்போகட்டும் அதற்கெண்டாலும் அக்கா கலியாணம் செய்ய வேணும்... ஊர் உலகத்திண்ட வாயை அடக்கிற திற்கும் அக்கா கலியாணம் என்டத செய்ய வேணும் நான் என்ட பாட்டில இப்படி இருந்திடுவேன், எனக்கு பிரச்சினையில்ல. இப்ப நீர் எடுத்த நகையும் காணாது எண்டும், இன்னும் ஒரு சோடிக் காப்பு தேவை எண்டும் அக்காவிண்ட மாப்பிளை இன்டைக்கு சொல்லி அனுப்பியிருக்கிறர். என்ன செய்யிறது எண்டு கவலைப்பட்டுக் கொண்டிருக்கேக்க உள்ளதையும் எடுத்துப்போட்டியள்.

சாரதா சொல்லிக் கொண்டிருக்க... அவனால் எதுவும் இடையில் கதைக்க முடியவில்லை அந்த முரட்டு முகத்தில் தோன்றிய சோகமும் கண்களின் உள்ளே தோன்றிய பளபளப்பு என்னவோ நிறையச் சொல்லத் துடித்தன.

அவன் மனத் திரையில் ஒரு பெண் தனக்குத்தானே தீ மூட்டி எரிந்து போகின்ற காட்சியும், பாழ் நெற்றியுடன் ஒரு முகம் சோகமாக அழும் காட்சியும்... தோன்ற அந்த முகங்கள் அவனின் சகோதரிகள் முகங்களாக மாறிக் கொண்டிருந்தன.

என்ன நினைத்தாஞே கட்டி வைத்த நகையையும், பணத்தையும் அப்படியே முடிச்சாக சாரதாவின் பக்கத்தில் வைத்துவிட்டு, அவர்கள் மூவரின் கைக் கட்டுகளையும் அவிழ்த்து விடுகின்ருன்.

"டேய்... வாங்கோடா போவம்... எல்லாரும் கெதியண்டு வாங்கோடா..."

யாருடைய பதிலையும் எதிர் பார்க்காதவன் போல் அவன் அந்த இருட்டுக்குள் நுழைந்து போனுன். மற்றவர்களும் திகைப்பையும், கேள்விக் குறிகளையும் முகத்தில் தேக்கி வைத்துக் கொண்டு வெளியேறினுர்கள்..

இந்த திடீர் மாற்றத்தை எதிர்பாராத சாரதா திகைத்து நின்ருள். சின்னதாக சந்தோஷமும், நிம்மதியும் மூவர் மனத்தின் ஓரங்களில் தெளிந்து நின்ருலும் இந்த திடீர் மாற்றத்தை நம்ப முடியாமல் பயமும் ஓரங் காட்டி வந்தது.

சாரதாவுக்கு நம்ப முடியவில்லை. தனது வெறும் பேச்சுக்கு இவ்வளவு சக்தியா? தனது சொற்களைக் கேட்டு திருந்தி விட்டானு? இது சாத்தியம் தானு? இப்படி எல்லாமுமோ நடக்கும்?...

நம்ப முடியாமல் நிற்க; அவன் தனது இருப்பிடம் நோக்கிச் சென்ருன். போனவன் மனத்திரைகளில்...

கசப்பான சில காட்சிகள் நிழல்களாக நெளிந்தன...

இரண்டு மூத்த சகோதரிகளுக்கும் மூன்று இளைய சகோதரிகளுக்கும் இடையில் அவன் வாழ்ந்தான். இல்லாமையும், இயலாமையும் அவன் இளமையை வளர்த்தன. சின்னச் சின்ன சந்தோஷங்களையும் - கண்கள் பெருக்கும் வண்ணக் கனவுகளையும் தூர எறிந்து விட்டு • தந்தையற்ற குடும்பத்தை தாங்கி நின்ருன் ஆனல் அவனுல் தாக்குப் பிடிக்க முடியவில்லை. ஒழுங்காக கல்வி கற்க முடியாத கஷ்ட நிலையில் சிறு வேலைகளைச் செய்து குடும்பத்தைக் காப்பாற்றி வந்த அவன் எப்படியோ மூத்த சகோதரிக்கு திருமணம் செய்து வைத்தது ஓர் பெரும் சாதனை என்று தான் அவன் அடிக்கடி நினைத்துக் கொள்வான்.

ஆனல்.. இந்த விதி இருக்கிறதே பட்டவர் குடியைத் தான் தொடர்ந்து பாழ் படுத்தும் என்பது போல்...

மூத்த சகோதரியின் கணவன் ஓர் குடிகாரன். அவன் செய்த அடவாடித் தனங்களால் கொடுக்கப் பட்ட சிறு தொகை சீதனம் சீரழிக்கப் பட்டு.. கூடவே அவளும் சிதைக்கப்பட்டு போய் "இந்த சீதனம் போதாது... இன்னும் போய்க் கொண்டு வா" என்ற தலைவனின் கட்டளையை சிரமேற் கொண்டு ஒரு நாள் இரவு இரத்தக் காயங்களின் துணையோடு பிறந்த வீடு வந்து சேர்ந்தாள்..

சகோதரியின் உடற் காயங்கள் - அவன் மனதில் ஊமைக் காயங்களை ஏற்படுத்தின.

இரஞ்சி நின்ற சகோதரியிடம், தனது இயலாமையை ஒப்புக் கொண்ட போது..

அந்த ஒப்புதல் அவளின் உயிரைப் பறிக்கும் என்று அப்போது அவன் நினைத்திருக்கவில்லை. அடுத்த நாள்... அதிகாலையில்

யாரும் எழுந்திருக்க முன் அவள் தீ மூட்டி எரிந்து போனாள். எரிந்தவள் .. சாம்பலாகி... எல்லாம் முடிந்து விட்டிருந்தாலும்...... அவள் மூட்டி எரிந்து போன அந்தத் தீ அணைந்து போகாமல் அவன் நெஞ்சிலும் வக்கிரமாக கொழுந்து விட்டு எரியத் தொடங்கியது.

பின்னர் கழிந்த சிலமாதங்களுக்குப் பிறகு.

அடுத்த சகோதரியும் தானாகத் தேடிக் கொண்ட ஒருத்தனுக்குப் பின்னால் ஓடிச் சென்ற பின் .. ஒரு மாத திருமணவாழ்வில் . விபத்தில் அவனை இழந்துவிட்டு விதவையாகி வெற்று முகத்தோடு வீடு வந்து சேர்ந்தாள். மறு மணம் புரிந்து வைக்க முடியாத நிலையில் அந்த பெண் நிலா வெறுமனே .. காட்டில் எறிந்து கொண்டிருந்தது.

இந்த இரண்டாவது அடியும் அதன் பிறகு உள்ள சகோதரிகளுக்கு திருமணம் செய்து வைக்க முடியாத நிலையும் அவனை வெகுவாகப் பாதித்தது.

அந்தப் பாதிப்புகள் அவன் பாதையையும் மாற்றவே செய்தன. இல்லாமை என்பது எப்பேர்ப்பட்ட யோக்கியனையும், அயோக்கியன் ஆக்கி விடும் என்பது அவனளவில் உண்மையாகி விட்டது நேர்மையும், உழைப்பும் அவனைப் பொறுத்தவரை கேட்பதற்கு மட்டுமே நன்றாக இருந்தன.

புத்திமதிகள் .. அறிவுரைகள் ... ஆலோசனைகள் எல்லாம் ... அவனுக்கு வெறும் வெற்று வேட்டுச் சமாச்சாரிகளாகின வெறுமனே அவற்றை அள்ளி வழங்கியவர்கள்... கூடவே அவனுக்குத் தேவைப்பட்ட பணத்தையும் கொடுத்திருந்தால் ஒருவேளை ... அவன் திசை திரும்பாது இருந்திருக்கும் ... வெளிநாடு போய் உழைப்பதற்கு அவனுக்கு தேவைப்பட்ட பணத்திற்கு அலைந்தும். கிடைக்காத விரக்தியில் தான் அவன் செய்ய தொடங்கிய சின்னச் சின்ன திருட்டுக்கள் நாளடைவில் பெரும் விருட்சமாகி வேர் ஊன்றத் தொடங்கியது.

இன்று திருடர்களின் தலைவனாகி தன்னைப் போன்றவர்களையும் கூட்டுச் சேர்ந்து... மாபெரும் கொள்ளைகளில் ஈடுபட்டு— இன்று எல்லோர் கண்களிலும் மண் தூவி வருகின்றான்....

அவன் நெஞ்சம் பழசை எல்லாம் நினைத்து, எரிந்து கொண்டிருந்தது.

பணக்கார முதலைகளை மட்டும் வேட்டையாடிக் கொண்டிருந்தவன் இன்று மட்டும் ஏன் இப்படி இடம் மாறி கன்னம் வைக்கத் துணிந்தான் என்று தெரியவில்லை. திருமணம் நடைபெறப் போகின்றது என்று வழமையாகக் கேள்விப்பட்டவுடனே அவன் அவசரப்பட்டதால் — வேறு எதையும் அவனால் ஆராய முடியாது போய் விட்டது,

மனச்சாட்சியை தட்டி எழுப்பி — தவறுகளை உணர வைக்க இதுவரை அவன் நம்பாது போன ஆண்டவனின் அமைதியான விளையாட்டாக இது இருக்குமா— என நினைக்கத் துணிந்தான்.

இது வரை கொள்ளையடித்தவர்களை நினைத்துப் பார்த்தான் ... அவை, அவனைப் பொறுத்தளவில் தவறாகவே படவில்லை. தமது தேவைக்கு மீறிய செல்வத்தையும், மிதமாகி முட்டி வழிந்த சொத்தையும் தான் கொள்ளையடித்தான்.

அவை கொள்ளை போயினும் குறைந்து போகவில்லை என்பது அவனுக்குத் தெரியும்,

ஊரையும், மக்களையும் ஏமாற்றி, அவர்களைக் கொள்ளையடித்து வைத்தவற்றையே, அவன் கொள்ளையடித்தான். அந்த பணக்காரக் கொள்ளையர்கள் நாகரீகமாக செய்த கொள்ளையைத்தான் இவன் சிறிது அநாகரீகமாகச் செய்தான், அவ்வளவுதான்... என்பது .. அவனின் நினைப்பு... சமாதானம் எல்லாம் ...

ஆனால் ...

இன்றுதான் தான் முதல் முறையாக பிழைவிட்டதை உணர்ந்து கொண்டான்.

சில தவறுகள், தாமதமாகத்தான் புரியுமோ?

சீ ... என்ன நான்... எங்க பிழைவிட்டன்... இன்டைக்கு ஏன் இப்படி செய்திட்டன்... சே சரியான பிழை .. கடவுளே ... என்ன இதெல்லாம் ... ஏன் இப்படி ... சே ...

விடியும் மட்டும் அவன் புலம்பிக் கொண்டிருந்தான் அந்தப் புலம்பலில் ...

ஒரு புலரல் பூத்தது.

மறு நாள் சந்தோஷமாக, புதிதாக விடிந்தது ... அந்த விடியல் ...

அவனுக்கு நாள் மட்டுமல்ல ......! □

# உலா......

— இராஜாத்தி இராம்

அது ஒரு இலக்கியக்கூட்டம். நான்கு சோடி இலக்கியத் தம்பதிகள் அதற்கு வந்திருந்தனர். 150 பேரைக் கொண்ட கனதியான கூட்டம் அது. வந்திருந்தோர் அனைவருமே அனுபவத்தாலோ தகைமையாலோ பட்டதாரி நிலைமைக்கு மேற்பட்ட கல்வியாளர் — எழுத்தாளர் — இலக்கிய கர்த்தர். பஞ்சுப்பொதியான தலையிலிருந்து மீசைதாடி பூனை மயிராக அரும்பிய வரையுள்ள வயதுடையோர்.

கூட்டம் மிக சுவாரஸ்யமாக நடந்து கொண்டிருந்தது. இரு மணிநேரத்தின் பின் இலக்கியத் தம்பதி ஒன்றின் ஆண்மகன் எழுந்து வெளியே சென்றுவிட்டார். வேறுசிலரும் ஒவ்வொருவராக அவசர வேலையின் நிமித்தம் சென்றுவிட்டனர். வேறு கடமைகளையும் நேரத்துக்குச் செய்ய வேண்டியமை காரணமாக இருக்கலாம். எழுந்துபோதல் நாகரீகமல்ல எனப் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுப் பெயர்களையும் பிரஸ்தாபித்தார். இது ஒன்றும் பிரச்சனையல்ல.

பெயர்ப்பிரஸ்தாபம் நடந்தபோது அந்த இலக்கியத் தம்பதியின் ஆண்மகன் பெயரும் கூறப்பட்டது. அந்நேரத்திலே கூட்டத்தில் இருந்த ஒருவர் ''வீட்டிலே சோறு காய்ச்சப் போக வேண்டாமோ'' என்ற மலினமான ஒரு பகிடியைத் தாழ்ந்த குரலில் விட்டார். அயலிலிருந்தோர் சிரித்தனர். இதுதான் உள்ளத்தை நோக வைத்தது. ''என்னே மனிதர் மதி என்றான்'' எனும் கம்பன் குரலும் ''மனம் வெளுக்க வழியுமில்லை எங்கள் முத்து மாரியம்மா'' என்னும் பாரதி குரலும் ஒருங்கே காதில் இரைந்தன.

ஆண்கள் வீட்டு வேலைகளில் உதவி செய்வது ஒன்றும் நம் நாட்டில் புதியதல்ல. தாயில்லாப் பிள்ளைகளைத் தந்தை வளர்க்கிறார். பிரம்மச்சாரிகள் தமக்குத் தாமே சமைக்கின்றனர். கனித்த இடங்களில் குழந்தைப்பேறு காலக் கடமைகளைக் கூட ஆடவனே செய்கிறார். கோவிலிலே பிரசாதங்கள் செய்ய வில்லையா மனைவி நோயுற்றால் அல்லது நோயுற்ற குழந்தையைக் கவனிக்க நேர்ந்தால், கணவன் இடிவிழுந்து இருந்துவிடுவானா? இருவரும் பணியாற்றும் இடங்களில் தகுந்த உதவியாட்களை வைத்திருப்பதில்லையா? பின் ஏன் இந்த வம்புத்தனம்?

---

# மனித உறவு....

(33-ம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்தபடியாக ஒருவர் ஒருவரை சார்ந்து இருப்பதற்காக பாசம் பந்தம் என பல்வேறு திரைகளை போட்டு உறவுகளை அமைப்பது தவறு. உறவுகள் சுதந்திரமாக அமையவேண்டும். அவை தடைக்கல்லாக கூடாது. உறவுகள் மனிதன் வளர்வதற்கே அன்றி சிறைப்பட அல்ல. உறவுகள் சுமுகமாக பிரிந்து செல்வதையும் ஏற்றுக்கொள்ளக் கூடியனவாக அமைய வேண்டும். பிரிந்து செல்கையில் ஏற்படும் துன்பத்தையும் ஏற்று (தாங்கி அல்ல) பகிர்ந்து மற்றவரின் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் துணை நிற்பதே சிறந்த உறவாகும். ☐

ஆசிரியர்: சரோஜா சிவசந்திரன்
B A. Hons (Cey.), M A (Jaf)

வெளியீடு: மகளிர் அபிவிருந்தி நிலையம்
07, இரத்தினம் ஒழுங்கை
கே. கே. எஸ். வீதி
வண்ணார்பண்ணை
யாழ்ப்பாணம்.

அச்சுப்பதிவு: நியூ ஈரா பப்ளிகேசன்
யாழ்ப்பாணம்.

"காலம் பெறுமதியானது"

"காலத்தை வீணுக்காதீர்கள்"

இல்லத்தரசிகளின் சலவை வேலைக்கு

## மில்க்வைற் சலவைப்பவுடர்

துரித சலவை, தூய வெண்மை,
சுத்தமான தேங்காய எண்ணெய்த் தயாரிப்பு.
சருமத்தைப் பாதிக்காதது.

100 வெற்றுப் பைக்கற் அனுப்பி
அழகிய கைலேஞ்சி ஒன்றைப் பெற்றுக்கொள்ளுங்கள்

# "மில்க்வைற்"

யாழ்ப்பாணம்.

---

இன்றே சேருங்கள் :

## அகில இலங்கை
## பரஸ்பர சகாய நிதிச் சங்கம் லிமிற்றெட்

7000 அதிகமான அங்கத்தவர்களைக்கொண்ட மக்களுக்காக மக்களாலேயே
நடாத்தப்படும் ஒரு நிதி நிறுவனம்

சங்கத்தால் வழங்கப்படும் நன்கொடைகள் :

★ ருது கல்யாணம் ★ திருமணம் ★ அந்தியகாலசேவை

இதர சேவைகள் :

கைமாற்றுக்கடன், குறுகியகாலக்கடன்,
பொறுப்புக்கடன், உண்டியல் மாற்றுதல்

பிரவேசம் ரூபா **120-00**
மாதாந்தம் ரூபா **20-00**

மேலதிக விபரங்கட்கு :

பொது முகாமையாளர்

அகில இலங்கை பரஸ்பர சகாய நிதிச் சங்கம்
தபாற் கந்தோரடி, வட்டுக்கோட்டை.

பாடல் பதிவுகளுக்கும், பிறந்தநாள் வாழ்த்து, ஒலிபெருக்கி வர்த்தக
விளம்பரங்களை ஆண், பெண் இருகுரல்களில் தமிழ், ஆங்கில
மொழிகளில் இசையுடன் பதிவு செய்து கொள்ள யாழ் நகரில் ஒரே இடம்




SHAN ADVERTISING SERVICES
JAFFNA

# ஷண் றெக்கோடிங் ஸ்பொட்

மத்திய பஸ் நிலையம், யாழ்நகர்.